விலை ரூபா 5-00

Registered as a News Paper in Sri Lanka

# முஸ்லிம் காங்கிரஸ்
مسلم کنگریس
MUSLIM CONGRESS

'அல்லாஹ்வின் வேதமெனும், கயிற்றைப் பலமாகப் பற்றிப் பிடித்துக்கொள்ளுங்கள். பிரிந்து விடாதீர்கள்' -அல்குர்ஆன்

மலர் 5 ★ றமழான்- ஷவ்வால் ஹிஜ்ரி 1410- ★ ஏப்ரல்-மே1990 ★ இதழ் 8 தொலைபேசி. 431711

## என்ன பெருநாள்?

பசியினால் உலக மாந்தர்
படுகின்ற பாட்டை எல்லாம்
கசிவினால் உணர்ந்து, காலக்
கொடுமையை மாற்ற, ஏகன்
இசைந்திடும் வழியில் நின்று
இரவெல்லாம் வணங்கினாலும்
இசைந்திடா வாழ்வில்,
ஏழை அழுந்தினால்-....
என்னபெருநாள்?

—தர்வேஷ்

# ஈதுல் பித்ர் ஈகைத் திருநாளில் இதயம் கனிந்த இனிய வாழ்த்துக்கள்!

## நமது தலைவிதியை நாமே எழுதுவோம்!

### தலைவர் சகோ: எம்.எச்.எம்: அஷ்ர.ஃ.ப் எம்பி.



அஸ்ஸலாமு அலைக்கும்!
என்றும், எனது இதயத்தின் இரத்தத்துளிகளான சகோதரர்களே!

இலங்கையின் குறிப்பாக வடக்கு கிழக்கு முஸ்லிம்களின்

இன்றைய நெருக்கடியான சோதனை மிகுந்த கால கட்டத்தில், நம்பிக்கையோடும் துணிவோடும் பொறுமையோடும் காலத்தை எதிர்நோக்க வேண்டும்! என்று உங்களைப் பணிவோடு கேட்டு, இந்த நோன்புப் பெருநாளில், என்றும் எல்லாம் எல்லார்க்கும் கிடைக்க அல்லாஹ்வை வேண்டி இதயத்தால் வாழ்த்துகின்றேன்.

ஸக்காத்- ஏழைவரிக்கடமையை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக சமூகத்தில், மிஸ்கீன்களும் பக்கீர்களும் என்றும் இருக்கத்தான் வேண்டுமா? இஸ்லாமிய சிந்தனையாளர்கள் இதற்கு பதில் சொல்ல வேண்டும்!

கொடுக்கின்ற ஒரு கூட்டத்தாரும், வாங்குகின்ற ஒரு கூட்டத்தாரும், சமூகத்தில் என்றும் இருக்கவேண்டும் என்பதா? ஏழைவரிவாங்குவதற்கு ஆட்களே இல்லாத ஒருபொற்காலம் இஸ்லாமிய வரலாற்றில் இருந்திருக்கிறது. என்பதையும் நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்.

ஏழ்மையை அறவே ஒழிப்பது தான் இஸ்லாத்தின் அதி உயர் லட்சியங்களில் ஒன்றாகும்.

அல்ஹாஹ்வின் அருள்மறையாம் திருக்குர்ஆனில் ஸலாத் தொழுகைக்கு அடுத்ததாக ஸக்காத் - ஏழைவரிக்கடமையைப் பற்றியே வலியுறுத்துவதை நாம் அவதானிக்க வேண்டும்,

10ஆம் பக்கம் பார்க்க

## எங்கள்அரசியற் தனித்துவ சுய-நிர்ணய உரிமைகளை அங்கீகரிப்பாயாக!

### தவிசாளர், எம். எச். சேகு இஸ்ஸடீன் வகி.எ.க.த.



பிஸ்மில்லாஹிர் றஹ்மானிர் றஹீம்;
அஸ்ஸலாமு அலைக்கும்.
தோழமையுள்ள சகோதரர்களே!

இணையற்ற இறைவன் இந்த ஈகைப் பெருநாளிலிருந்து நமது இதயங்களை நம்பிக்கை ஒளியால் பிரகாசிக்கச் செய்வானாக!

அரசியல் கொந்தளிப்புகளால் தத்தளித்துத் தடுமாறும் இந்த நாட்டின் மீதுசாந்தியையும் சமாதானத்தையும் ஏற்படுத்துவானாக!

இந்த நாட்டின் மிகச்சிறுபான்மையினராகிய முஸ்லிம்களின் அரசியல் பிரச்சினைகளை இலகுவாகத் தீர்த்துத் தருவானாக.

வடக்கு - கிழக்கில் வாழும் முஸலிம்களின்அரசியற் தனித்

10ஆம் பக்கம் பார்க்க

# உலகளாவிய முஸ்லிம்களின் தலைமைத்துவம்

—முஅம்மர் கதாபி!

# இலங்கை முஸ்லிம்களின் தலைமைத்துவம்

—முஹம்மது அஷ்ரஃப்!

## இலங்கை முஸ்லிம்களுக்கு சர்வதேச முஸ்லிம்சமூகத்தின் அங்கீகாரம்! இலங்கை முஸ்லிம்களின் அரசியல் தனித்துவத்துக்கு கிடைத்த மாபெரும் வெற்றி!

உலகளாவிய இஸ்லாமிய வெகுஜனங்களின் தலைமைத்துவ அமையத்தின் உதவிச் செயலாளர் நாயகமாகவும் அதன் நிறைவேற்றுக்குழு உறுப்பினராகவும், ஆசியநாடுகளின் பொறுப்பாளருமாக, இலங்கை முஸ்லிம்களின் வெகுஜனத்தலைவரும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசியத்தலைவரும், திகாமடுல்ல மாவட்டத்தின் மக்கள் பிரதிநிதியுமான சகோ. எம், எச். முஹம்மதுஅஷ்ரஃப் அவர்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள்.

சகோ. அஷ்ரஃப் அவர்களுக்கு கிடைத்திருக்கும் இந்த சர்வதேச கௌரவம், இலங்கை முஸ்லிம்களுக்கும், குறிப்பாக இஸ்லாமியத் தனித்துவத்தால் தம்மை அடையாளம் காண வேண்டும் என்று' அதற்காகவே தம்மை அர்ப்பணித்து உயிர்த்தியாகங்கள் செய்த தியாகிகளுக்கும்-அந்த தியாகத்தை தொடர்ந்தும் செய்வதற்குப் புறப்பட்டு நிற்கின்ற ஆயிரமாயிரம் இளைஞர்களுக்கும் கட்சியின் அங்கத்தவர்களுக்கும் அனுதாபிகளுக்கும் கிடைத்தமாபெரும் வெற்றியும்கௌரவமுமாகவே இந்த சந்தர்ப்பத்தை நாம் கருதுகின்றோம்.

இலங்கை முஸ்லிம்களின் தனித்துவமான அரசியல், சமூக, பொருளாதார, கலாசார, பண்பாட்டு விழுமியங்களை சர்வதேச முஸ்லிம் சமூகம் அங்கீகரித்துள்ளது.

கடந்த காலங்களில்சர்வதேச அரங்குகளில் இலங்கை முஸ்லிம்களின் அபிலாஷைகளை கணக்கில் எடுக்காமல், அதற்குப்பே டப்பட்டுவந்த இரும்

10ஆம் பக்கம் பார்க்க



THE BULLETIN OF THE SRI LANKA MUSLIM CONGRESS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம் காங்கிரஸ்

375/, டாம் வீதி, கொழும்பு-12 தொலைபேசி 431711

## இனிமேலாவது புலிகள் இறங்கி வருவார்களா?

ஆயுதம் ஏந்துவதை தவிர எதையுமே அறிந்திராத விடுதலைப் புலிகள் காட்டுராஜா தர்பார் நடாத்தத் துவங்கியுள்ளனர். கிழக்கிலங்கை முஸ்லிம்களின் முகத்தில் சந்தோசத்தைக் காணுவது முயற்கொம்பாக மாறிக் கொண்டிருக்கின்றது.

தினமும் முஸ்லிம் வாலிபர்களைக் கைது செய்வதும் அவர்களை தம் இருட்டறைகளிலே போட்டு மிருகத்தனமாக வதைப்பதும்-இம்சிப்பதும்-கைது செய்தவர்களில் விரும்பியவர்களை சுட்டுத்தள்ளுவதும் புலிகளுக்கு கைவந்த கலைகள்.

அரிசி ஆலை முதலாளிமார் துவக்கம் பெட்டியிலே அரிசி விற்கும் அப்பாவி பாத்தும்மாலாத்தாகூட வரிகட்டித்தான் வாழ வேண்டும், இத்தனைக்கும் புலிகள் ஒருநாளும் எங்களது வயல்களுக்கு வரவுமில்லை. ஏர் பிடிக்கவுமில்லை. நீர்ப் பாய்ச்சவும் இல்லை. வாழ்ந்தால் வரி கட்டிவாழ் - இல்லையெனில் மாண்டு தொலையென்பது புலிகளுக்கு தெரிந்த ஜனநாயக பாரம்பரியம்.

அவர்களின் அட்டகாசங்களை தட்டிக்கேட்க ஆளில்லாத தைரியம் அவர்களுக்கு. பொலிஸ் இல்லை! நீதிமன்றம் இல்லை! சட்டம் இல்லை! நீதி இல்லை! நியாயமுமோ மனச்சாட்சியோ வடகிழக்கில் இல்லை! அந்த மண்ணின் மைந்தர்கள் சுதந்திரமாக நடக்கவும் முடியாது. ஒரு மயான அமைதியை தோற்றுவித்ததில் வெற்றிபெற்ற எமன்களாக உருவெடுத்துள்ள இவர்கள் எல்லாம் இன்று தடியெடுத்த வேட்டைக்காரர்களாக மாறிவிட்டார்கள்.

ஏறத்தாழ இரண்டு தசாப்தங்களாக உலகின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் மனித உரிமை மீறல்களைப் பற்றிப்பேசிய இந்த புலிகள்தான் இன்று முஸ்லிம் சமூகம் என்ற பலகையில் மனித உரிமை மீறல்களுக்கு புதிய வரைவிலக்கணங்களையும் எழுதிக் கொண்டிருக்கின்றார்கள்.

இம்மென்றால் சிறைவாசம். ஏனென்றால் வனவாசம் எனப்பாடிய பாரதி! இவர்கள் செய்வதை பார்த்திருந்தால் 'இம்மென்றால் எலும்புடையும், ஏனென்றால் உயிர்பிரியும்! என்று நிச்சயம் தனது கவிதைகளை மீண்டும் ஒருதடவை எழுதிப்பார்த்திருப்பான்.

முஸ்லிம்கள்மீது புலிகள் தினமும் வளர்த்துக்கொண்டிருக்கும் அதிருப்தி ஒரு எரிமலையாக துரித வேகத்தில் வளர்ந்து கொண்டிருக்கின்றது. இது என்றோ ஒருநாள் வெடித்தே தீரும். இந்நிலையை தவிர்ப்பதுவே முஸ்லிம்காங்கிரஸின் தொழில் பாடாகும்.

முஸ்லிம்கள் என்ற தனித்துவத்தை ஏற்கமாட்டோம். அவர்கள் இஸ்லாமிய தமிழர்களே என இறுமாப்புடன் பேசிய புலிகள், இன்று முஸ்லிம்கள் என்ற சொற்றொடரை வாய் நிறைய அனுஷ்டானம் செய்வது முஸ்லிம் காங்கிரஸ் அடைந்த பெரு வெற்றியாகும்.

''விடுதலைப் புலிகளின் போராட்டம் தமிழர்கள் இழந்த மண்ணை மீட்பதற்கானது மட்டுமல்ல. முஸ்லிம்கள் வடகிழக்கில் இழந்த தாயகத்தையும் விடுவிப்பதற்கானதே'' என்பவர்கள்-வடகிழக்கில் முஸ்லிம்களின் தாயகத்தை நிலத்தொடர்புள்ள முறையில் அல்லது நிலத்தொடர்பற்ற ரீதியில் அடையாளம் காட்ட மறுப்பதன் இரகசியமென்ன?

வெறும் வாய் மாசாலங்களாலும் வாய்ப்பந்தல்களாலும் தமிழ் முஸ்லிம் ஒற்றுமையை கட்டிவளர்க்க முனைவது சிறுபிள்ளைத்தனமாகும். முஸ்லிம்களும் தமிழர்களும் ஒற்றுமையாய் வாழ வேண்டுமென்பதன் அர்த்தம் எல்லா முஸ்லிம்களும் தமிழர்கள் ஆலயங்களில் சாஷ்டாங்கம் செய்ய வேண்டுமென்பதல்ல, அன்றி பள்ளி வாசல்களெல்லாம் கோயில்களாக மாற்றப்பட்ட பின்னர்-முஸ்லிம்கள் தமது சுயநிர்ணய உரிமையை பாவித்து அவர்களின் வணக்கத் தலங்களை மீட்சி செய்யலாம் என்பதுமல்ல.

முஸ்லிமின் பள்ளிவாசலை முஸ்லிமல்லாதவன் மிதிக்காமல் கௌரவப்படுத்துவதிலும- தமிழர்கள் கோயில்களிலும் ஆலயங்களிலும் வணங்குவதற்கு உரிய ஒத்தாசைகளை அவற்றுக்கு வெளியே நின்றுகொண்டு வழங்குவதிலுமே எதிர்கால தமிழ் முஸ்லிம் நல்லுறவை கட்டி வளர்க்க முடியும். வேற்றுமைகளை மதித்து கண்ணியப்படுத்துவதிலுள்ள ஒற்றுமைதான் வடகிழக்கில் நிரந்தர அமைதியை ஏற்படுத்தும் வேறுபாடுகள் எதுவுமில்லாத சம்பூர்ண ஒற்றுமை வடகிழக்கிலுள்ள எல்லோரும் ஒரே மதத்தை தழுவுகின்ற போது சிலவேளை நடைபெறலாம். இது என்ன நடக்கக்கூடிய சங்கதியா? என்பதில் புலிகள் தெளிவு காண வேண்டும்,

முஸ்லிம் சமூகத்தின் எதிர்கால அபிலாஷைகளை அடைய உள்ள ஒரே வழி ஒரு முஸ்லிம் மாகாணசபைதான் என்பதில் முஸ்லிம் சமூகம் தெளிவாக நிற்கின்றது, இதைப் புரிந்துகொள்ள முடியாத நோய் புலிகளைப் பீடித்துள்ளது. முஸ்லிம் மாகாணசபையென்பது வடகிழக்கு வாழ் முஸ்லிம்களின் அபிலாஷையேயன்றி இலங்கையின் ஏனைய பகுதிகளில் வாழும் முஸ்லிம்களின் பிரச்சினைக்குரிய தீர்வு அதுவல்ல என்பதைக்கூட அறிந்துகொள்ள முடியாத அளவுக்கு அரசியல் சிறுபிள்ளைத்தனம் புலிகளைப் போட்டு வாட்டுகின்றது.

முஸ்லிம் சமூகத்தை சீண்டுவதற்கு புலிகளுக்கு கிடைத்த கடைசி ஆயுதம் 6ஆவது அரசமைப்புத் திருத்தமாகும் இதை நீக்குவதற்கு புலிகள் கூறும் காரணம் ''இதை வைத்திருப்பதில் உப்புமில்லை புளியுமில்லை''என்பதுதான். 6வது திருத்தம் உப்புப் புளியற்றதெனில் அது இருந்துதானென்ன இல்லாமல் போனால்தானென்ன?

அப்படியில்லாமல் 6வது திருத்தத்தை நீக்குவது அத்தனை அவசியமெனில்-அதுதான் தமிழர்களின் அபிலாஷைகளின் சிகரமென்றால். அதை பெறுகின்ற சாத்தியப்படக்கூடிய வழிவகைளப் பற்றி புலிகள் சிந்திக்கவேண்டும். பிரேமதாசா அரசால் இப்பெரும் பணியை முஸ்லிம் காங்கிரஸின் உதவியின்றி செய்யமுடியாது, முஸ்லிம்களின் அபிலாஷைகளை அடைய புலிகள் உதவாமல் புலிகளின் அபிலாஷைகளை அடைய முஸ்லிம் காங்கிரஸ் உதவுவது நியாயமாகுமா? நடுநிலையாளர்கள் சிந்திக்க வேண்டிய கேள்வி இது. வடகிழக்கின் நிரந்தர அமைதிக்கான திறவுகோல் மீண்டும் அல்ஹமதுலில்லாஹ்! முஸ்லிம் காங்கிரஸின் கைகளில் விழுகிறது. புலிகள் இனியாவது இறங்கிவர வேண்டும்!

# விடுதலைப்புலிகள்-முஸ்லிம்காங்கிரஸ் உறவைச் சீர்குலைக்க திரைமறைவில் சதிமுயற்சி!

**ஒரு பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு புலிகளின் இந்த அறிக்கைகள் ஓர் ஆரோக்கியமான சூழ்நிலையை உருவாக்கியிருப்பதாக தமிழ் - முஸ்லிம் ஐக்கியத்தை விரும்புகிற தமிழ்-முஸ்லிம் பிரமுகர்களும், புத்திஜீவிகளும் அரசியல் அவதானிகளும் நம்புகின்றனர்.**

*''முஸ்லிம்களின் குரல் முஸ்லிம் காங்கிரஸ்!''இது கடந்த பொதுத் தேர்தலில் முஸ்லிம்களின் தீர்ப்பு!*

*''முஸ்லிம் காங்கிரஸ் இந்த நாட்டின் மூன்றாவது பெரும் அரசியற் சக்தி!''*

*''இது தேர்தல் ஆணையாளரின் பிரகடனம்!*

*''முஸ்லிம் காங்கிரஸின் அமோக ஆதரவுடன தான் ஜனாதிபதி தேர்தலில் ஐ.தே. கட்சி வெற்றிபெற்றது! நாம் இதை மறக்கமாட்டோம்!'' இது மாண்புமிகு ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா அவர்களின் பகிரங்க அறிக்கை.*

*இதற்கு இலங்கை தமிழ் முஸ்லிம் சமூகங்கள் விதிவிலக்காகஇருக்க முடியாது.*

*இன்று தமிழ்மக்களின் தார்மீகக் குரலாக இருக்கின்ற விடுதலைப் புலிகள், நாளை அங்கீகரிக்கப்பட்ட அரசியற் குரலாகவும் மாறலாம்!*

*முஸ்லிம்களைப் பொறுத்த மட்டில் முஸ்லிம் காங்கிரஸ் மட்டும்தான் அதன் அரசியற் குரல்!*

*யார் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இந்த யதார்த்தத்தை ஜீரணித்தே ஆக வேண்டும். ஒரு சமூகத்தின் அடிப்படை உரிமைக்காக*

## ''மருதூர்க்கனி''

தேசிய கொள்கை பரப்புச் செயலாளர்

முஸ்லிம் காங்கிரஸ்

*இந்த நூற்றாண்டின் இந்த இறுதித்தசாப்தத்தில் உலகம் முழுவதும் நடந்து கொண்டிருப்பது என்ன? நாடுகளின் சமூகங்கள், கிளர்ந்தெழுந்து தமக்கு ஜனநாயக உரிமைச் சுயாட்சி கோரி வீதியில் இறங்கிப் போராடுகின்றன.*

*தமது விடுதலைக்காக பரித்தியாகம் செய்கின்றனர்.*

*மற்றொரு சமூகம் பேசக்கூடாதென்பதல்ல. அதுஅவர்களின் மனிதாபிமானத்தோடு சம்பந்தப்பட்ட விஷயம்! ஆனால் ஒரு சமூகத்தின் குரலாக மற்றொருசமூகம்இருக்க முடியாது!*

*அழுதழுதும் பிள்ளை அவளே பெறவேண்டும்!*

*விடுதலைப் புலிகள் - முஸ்லிம் காங்கிரஸ், புரிந்துணர்வின் அடிப்படையில், இடப்படுகின்ற''தமிழ்-முஸ்லிம் ஐக்கியம்'' என்ற அடித்தளத்தின் மீதுதான் வடகிழக்கின் விடுதலையும் தமிழ்,முஸ்லிம் சமூகங்களின் விடுதலையும் நிரந்தரமாக முடியும்.*

*பேரினவாத சக்திகளும் அதன் தரகர்களும் தமது அரசியல் சமூக பொருளாதார மேலாதிக்கத்தை வடகிழக்கில் நிறுவுவதற்காக, விடுதலைப் புலிகள் - முஸ்லிம் காங்கிரஸ் கருத்துவேறுபாடுகளைபெரிசுபடுத்தி பகைமுரண்பாடுகளாக்கவும் தமிழ் - முஸ்லிம் உறவுகளை சீர்குலைக்கவும் திரைமறைவில் சதிமுயற்சிகள் நடைபெறுவதாக தெரிய வந்துள்ளது. இந்தச் சதிவலையில் முஸ்லிம் காங்கிரஸ் மட்டுமல்ல,விடுதலைப் புலிகளும் விழுந்துவிடக்கூடாது! என்று ஆலோசனை கூற விரும்புகிறோம்.*

*தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் பார்வையாளராக இருக்காமல் பங்காளராக இருக்க வேண்டும் என்று புலிகள்கேட்கின்றனர்.*

*விடுதலையின் பின்பு ,முஸ்லிம் சமூகம்தனது சுயநிர்ணய உரிமையை-தனித்துவம்,பாதுகாப்பு, பாரம்பரிய பிரதேசம் என்று அனைத்து உரிமைகளையும் பெறுவதற்கு உரித்துடையது என்றும் அது மாத்திரமன்றி பிரிந்து செல்வதற்குரிய உரிமையைக்கூட வழங்குவற்கு தயாராக இருப்பதாகவும் கூறிவருகின்றனர்.*

*விடுதலைப் புலிகளும் முஸ்லிம் காங்கிரஸும் ஒரு பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு புலிகளின் இந்த அறிக்கைகள் ஓர் ஆரோக்கியமான சூழ்நிலையை உருவாக்கியிருப்பதாக தமிழ்-முஸ்லிம் ஐக்கியத்தை விரும்புகின்ற தமிழ்-முஸ்லிம் பிரமுகர்களும், புத்திஜீவிகளும் அரசியல் அவதானிகளும் நம்புகின்றனர்.*

*மனிதனின் நாகரிகமே பேச்சுவார்த்தைகள்தான்! ஒரு சமூகம் மற்றொரு சமூகத்தோடு பேசாமலிருக்க முடியாது! பேச்சுவார்த்தைகள் எத்தனை முறைதான் தோற்றாலும் தொடர்ந்து பேசுவதன் மூலமே தீர்வுகளைக் காண முடியும்!*

*ஸ்ரீலங்கா அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இருக்காத பகையா முஸ்லிம் காங்கிரஸுக்கும் புலிகளுக்கும் இருக்கிறது?*

*இந்தியாவுக்கும் புலிகளுக்கும் இருக்காத உறவா முஸ்லிம் காங்கிரஸுக்கும் இந்தியாவுக்கும் இருக்கிறது?*

*அரசியலில் நிரந்தரமான உறவும் இல்லை!நிரந்தரமான பகையும் இல்லை!*

-10 ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜிஹாத் இயக்கம் முஸ்.காங்கிரஸின் ஆயுதப்பிரிவு என்று, கூறப்படுவதில் ஏதாவது உண்மை இருக்கிறதா?

## கேள்வியும் பதிலும்

-தர்வேஷ்ஞானி-

1. புலிகளினால் முன்வைக்கப்பட்டிருக்கும் ''ஆறாவது அரசியல் திருத்தச்சட்டத்தை வாபஸ் பெறவேண்டும்'' என்ற, கோரிக்கையை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுமா? அவ்வாறு ஏற்றுக்கொண்டால் தமிழீழப் பிரகடனத்துக்கு சட்டரீதியான அங்கீகாரம் வழங்கியதாக அமைந்துவிடாதா?

எம். வை.ஏ.காதர், குச்சவெளி

1. ''அரசியலில், இதெல்லாம் நடக்காது, அது தான் நடக்கும்''! என்றெல்லாம் அடித்துச் சொல்லமுடியாது! அரசியலில் நிரந்தரமானநண்பனுமில்லை! நிரந்தரமான எதிரியுமில்லை!! போகிற போக்கைப்பார்த்தால், அரசாங்கம், புலிகளின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆனால் அரசியல் சட்டத்தை மாற்ற மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் வேண்டுமே?

உங்களுக்கு தூண்டில் போட்ட அனுபவம் இருக்கிறதா? இருந்தால் தெரியும்! விட்டுக் கொடுத்து வெட்டினால் எப்படியிருக்கும்? ஆர்விட்டுக்கொடுத்து ஆர்வெடப் போகிறார்களோ இருந்து பார்ப்போம்!

உண்மையில் ஆறாவது அரசியற்திருத்தத்தை வாபஸ் பெறுவது என்பதும் ஈழப்பிரகடனத்தைத, அங்கீகரிப்பது என்பதும் இரண்டும் ஒன்றேதான்!

2. ''புலிகளின்தாகம் தமிழீழத் தாயகம்'' என்று, இன்றும் முழங்குகின்ற புலிகள், ஏன் தமிழ் ஈழப் பிரகடனத்துக்கு எதிராக குரல் எழுப்புகின்றார்கள்?

முஹமட் அஸ்மி கொழும்பு 15

2. இது தெரியவில்லையா? மாமியார் உடைத்தால் அது மண்குடம். மருமகள் உடைத்தால் அது:பொன் குடம்!! அவ்வளவுதான் விஷயம்.

3. வடக்கு கிழக்கில் இலங்கை ராணுவத்தினர், டயர்களை குவிப்பதாக, கூறப்படுகின்றது. இதனால், தென்னிலங்கைப் பயங்கர வாதிகளுக்கு ஏற்பட்ட கதி, தமிழ்த்தீவிர வாதிகளுக்கும் ஏற்படுமா?

எம். ஐ. எம். பர்ஷான் காத்தான்குடி

3. பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன்க இருக்கிறாரே துணிஞ்சகட்டை! அவருக்கு எந்த விதமான அரசியல் எதிர்பார்ப்புகளும்இருப்பதாக தெரியவில்லை! அதனால், தனக்கு சரி என்று பட்டதை செய்து கொண்டிருக்கிறார். நடந்தாலும் நடக்கும் யார்கண்டார்?

4. உலப்பன காதர், ''வடகிழக்கில், முஸ்லிம் களுக்கு முஸ்லிம் காங்கிரஸை விட, விடுதலைப்புலிகளின் தலைமைத்துவமே உகந்தது'' என்று, பேசியிருக்கிறாரே ஞானியாரே! தங்கள் அபிப்பிராயம் என்னவோ?

எஸ். ருஸைன் முஹம்மத் ஹபுகஸ்தலாவ

4. இந்த மாபெரும் அரசியல் தீர்க்கதரிசனத்தை திருவாய் மலர்ந்ததுக்காக இலங்கை முஸ்லிம்கள், குறிப்பாக வடகிழக்கு முஸ்லிம்கள் அன்னாருக்கு நன்றி சொல்ல வேண்டும். அதுமாத்திரமல்ல, இதற்காக, ஒரு நோபல் பரிசைஉருவாக்கியாவதுஅவர்களுக்கு வழங்க வேண்டும்!

5 ஜிஹாத் இயக்கம், முஸ்லிம் காங்கிரஸின் ஆயுதப் பிரிவு என்று, கூறப்படுவதில் ஏதாவது உண்மை இருக்கிறதா?

ஏ. எம். காதர் களுத்துறை

5. 'தமிழன் என்றால் புலி!' என்று, சிங்கள வகுப்புவாதிகள், எத்தனை கர்ணகடூரமாக நடந்து கொண்டார்கள்! எவ்வளவு வேதனைகள்? எவ்வளவு அழிவுகள்? எத்தனை இழப்புகள்? இன்று, 'முஸ்லிம்கள் என்றால் ஜிஹாத்' என்று, சில தமிழ் வகுப்பு வாதிகள் முஸ்லிம்களை நினைக்கின்றனர். பொறுப்புவாய்ந்த சிங்களத் தலைவர்கள் தமிழ்மக்களின் பிரச்சினைகளை உணர்ந்தது போல, பொறுப்புவாய்ந்த தமிழ்த்தலைவர்கள், முஸ்லிம்களின் பிரச்சினைகளை உணரவேண்டும். சிங்களப் பேரினவாதம், தமிழ்மக்களுக்கு செய்த அதே தவறை, தமிழ் மக்கள் முஸ்லிம்களுக்கு செய்யமாட்டார்கள் என்று நினைக்கிறேன். முஸ்லிம் காங்கிரஸுக்கும் எந்த ஆயுதப்பிரிவுக்கும் இது வரை சம்பந்தம் கிடையாது.

ஆனால், மருண்டவன் கண்களுக்கு இருண்டதெல்லாம் பேய்! என்று, ஒரு பழமொழி இருக்கிறதே!

6. நல்ல கறுப்பு நிறமான ஆளுக்கு 'வெள்ளையன்' என்றும், அவலட்சணமான ஒருவருக்கு 'மன்மதராசா' என்றும், எதிர்மறையாக பேர் வைத்து அழைக்கிற வழக்கம் இருக்கிறதா?

ஏ. சி. எம். றிபாய் கல்முனைக்குடி - 3

6. கிராமப்புறங்களில் தமிழ் மக்கள் மத்தியில் அவ்வாறான ஒரு மரபு இருக்கிறது என்று, நினைக்கிறேன். அதனால் தான், 'உண்மை' என்ற, பெயரில், ஒரு மஞ்சள் பத்திரிகை பொய்யையே எழுதித் தள்ளுகிறது என்று நினைக்கிறேன். முஸ்லிம் காங்கிரஸ் மீது சேறு பூசலாம் என்று நினைத்த அனாமதேய பிரசுரம் ஒன்றை இந்தப் பத்திரிகை பிரசுரித்திருப்பதன் மூலம், ''பொய்'' சந்திக்கு வந்து நிற்கிறது.

'7. சர்வதேசமட்டத்தில், விடுதலைப்புலிகளுக்குள்ள செல்வாக்கை அழிப்பதற்காகத்தான் முஸ்லிம் காங்கிரஸ் முயற்சிசெய்து வருகின்றது' என்று, புலிகள் தரப்பில் குற்றம் சுமத்துகிறார்களே இதற்கு என்ன சொல்லப் போகிறீர்கள்?

எம். றிஷ்வான் அக்கரைபற்று3

7. முதலில், முஸ்லிம் காங்கிரஸை ஒரு பெரிய சக்தியாக, சர்வதேச அரங்கில் இவ்வளவு விரைவாக எடைபோட்டதற்கு புலிகளுக்கு நன்றி சொல்ல வேண்டும்! பாம்பின்கால் பாம் பறிந்ததோ என்னவோ?

வடகிழக்கில் முஸ்லிம்களைப் பொறுத்தமட்டில் அரசாங்கம், கண்ணை மூடிக்கொண்டு பூனைபால் குடிப்பது போல நடந்துகொண்டது. இன்றும்தான், அவர்களோடு சேர்ந்த பாவமோ என்னவோ புதிய கூட்டாளிகளோடு சேர்ந்து கொண்டு, புலிகளும் முஸ்லிம்களை-முஸ்லிம் காங்கிரஸை மட்டம் தட்டலாம்என்று நினைக்கிறார்கள்.

''முஸ்லிம் காங்கிரஸ் பொய் சொல்லுகிறது, நாங்கள் முஸ்லிம்களுக்கு எதுவுமே செய்யவில்லை. அவர்கள்தான். எங்கள் முஸ்லிம் ஆதரவாளர்களை பயமுறுத்துகிறார்கள். கொழும்பில் அகதிகள் முகாம் என்பதெல்லாம் வெறும் கட்டுக்கதை'' என்றெல்லாம் புலிகள் அறிக்கையும் விட்டார்கள்.

எனவே, நாங்கள் சத்தியத்தை நிலைநாட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. எங்கள் நிலைமையை ஊரறிய உலகமறிய உரத்துச் சொல்லவேண்டிய நிர்ப்பந்தம் எங்களுக்கு ஏற்பட்டது அவ்வளவுதான், ஒரு சமூகத்தின் விடுதலைப் போராட்டத்தை காட்டிக்கொடுத்து, அதை கொச்சைப் படுத்துவது எங்கள் இரத்தத்திலேயே கிடையாது.

# மண்குதிரை-புலிகள் ஒப்பந்தம் முஸ்லிம்களை பாதுகாக்குமா?

8. லிதுவேனியா, சுதந்திரப் பிரகடனம் செய்திருப்பதைப் பற்றி ஞானியாரே உங்கள் ஞானம் என்ன சொல்கிறது?

வை. எல். எம். யாசீன் குருநாகல்

லிதுவேனியா மாத்திரமல்ல,, தமது, சமூக, பொருளாதார, கலாச்சார விழுமியங்களின் சுதந்திரத்திற்காக எந்தச் சமூகமும் போராடுவதும் தியாகங்கள் செய்வதும் இறுதியில் அதை அடைவதும் வரலாற்றில் தவிர்க்க முடியாத நிகழ்வுகள்தான்.

'இந்தியா, இலங்கை, உட்பட உலகம் முழுவதுமே இந்த நூற்றாண்டின் இறுதிதசாப்தத்தை, சமூகங்களின் ஜனநாயக உரிமை பிரதேச சுயாட்சிகளுக்கான போராட்டக்கால கட்டம்' என்று பிரகடனப்படுத்தலாம் போலிருக்கிறது!

9. முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் இப்போதெல்லாம் அடிக்கடி அறபு நாடுகளுக்கு சென்று வருகிறாரே என்னவாக இருக்குமோ?

ஏ. எம். எம். மிஃளார் எருக்கலம்பிட்டி, மன்னார்

9. இலங்கையில் வாழுகின்ற முஸ்லிம்களுக்கு என்ன? அவர்கள் செல்லப் பிள்ளைகள்! எந்தப்பிரச்சினையுமே கிடையாது! தேனும் பாலும் ஆறாக ஓடுகிறது! அள்ளிப் பருகிக் கொண்டு நிம்மதியாக மகிழ்ச்சி மஞ்சத்தில் உறங்குகிறார்கள்'' என்று, இன்றும் நாக்கூசாமல் கூறுகின்ற முஸ்லிம் தலைவர்கள் இங்கு இருக்குமட்டும், முஸ்லிம்காங்ரஸ் தலைவர் அறபு நாடுகளுக்கு மட்டுமல்ல, வேறு வேறு, நாடுகளுக்கும், இடங்களுக்கும் கூட செல்ல வேண்டிவரலாம்!

10. வடகிழக்கில் இனங்களுக்கிடையில் அமைதியும் சமாதானமும் ஏற்பட்டுள்ளது என்று புலிகள் கூறுகின்றார்களே.....?

ஏ. எஸ். எம். நவாஸ், கொழும்பு-14

10. உண்மைதான். அங்கு ஏற்பட்டிருப்பது, அப்படி இப்படி அமைதியல்ல! மயான அமைதி!! ஆயிரக்கணக்கான முஸ்லிம் இளஞர்கள், தர்மகர்த்தாக்கள், வர்த்தகர்கள், உலமாக்கள், அடியும் உதையும் தாங்கமுடியாமல் பற்கள் தகர்க்கப்பட்டு ரத்தவாந்தி எடுத்துக்கொண்டு கொழும்புக்கு ஓடிவந்ததும், கடத்திக் கொண்டுபோய் லட்சம் லட்சமாக பணம் பறிப்பதும், தங்கள் கட்சிக்கு வரவேண்டும்'' என்று, துப்பாக்கி முனையில் முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்களை நிர்ப்பந்திப்பதும் ஏனைய பயங்கரவாதக் குழுக்கள் இன்றும் சல்யாண வீடுகளிலேயே பகிரங்கமாக கொள்ளையடிப்பதை பார்த்துக் கொண்டு பாராமுகமாக இருப்பதும், 'ஜிஹாத்' என்ற, பேரில் கைது செய்ப்பட்ட முஸ்லிம் காங்கிரஸ் வாலிபர்களை இன்னும் விடுதலை செய்யாமலிருப்பதும்,... சமாதானத்தினதும் அமைதியினதும் லட்சணங்கள்தானே!

11. மண்குதிரை-புலிகள் ஒப்பந்தம் முஸ்லிம் சமூகத்தை பாதுகாக்குமா?

ஏறாவூர் எம் றிஷான்

11. அதே மண்குதிரை! எப்படி முஸ்லிம் சமூகத்தை பாதுகாக்க முடியும்? யாரோடு யார் ஒப்பந்தம் செய்வது? என்று, விவஸ்தையே இல்லாமல் போயிற்று. கடந்த பொதுத்தேர்தலில், மண்குதிரைக் கட்சியின் தலைவர்களே, கைச்சின்னத்தில், கேட்டவர்கள்! எதிர்வரும் தேர்தல்களில் ''புலிச்சின்னத்தில் கேட்பார்கள்! ஆச்சரியப் படவேண்டாம்! எந்தச்சமூகம் எக்கேடு கெட்டாலும் சரிதான், அவர்கள் கொஞ்சப் பேருக்கு கதிரைவேணும்!

12. பசி வந்தால் பத்தும் பறந்து விடும்' என்கிறார்களே அந்த பத்துமென்ன ஞானியாரே?

எம். ஹக்கீம் கல்ஹின்னை

12. பழந்தமிழ் தனிப்பாடல் ஒன்று இவ்வாறு கூறுகின்றது. 'மானம், குலம், கல்வி, வண்மை, அறிவுடைமை, தானம், தவம், முயற்சி, தாளாண்மை, தேனின் கசிவந்த மெல்லியர் மேல் காமுறுதல் பத்தும் பசி வந்திடப் போம் பறந்து'

ஆனால், 'தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் இந்த ஜெகத்தினை அழித்திடுவோம்!' என்றான் பாரதி. எனவே, பசிவந்தால் பத்தல்ல எல்லாமே பறந்துவிடும்!

13. அரசியல்அமைப்பின்ஆறாவது சட்டமூலம் திருத்தப் படும்போதுமுஸ்லிம்காங்கிரஸ் 'முஸ்லிம் மாகாணக்கேரிக்கையை முன்வைக்கும் என்று பரவலாக பேசப்படுகிறதே உண்மையா?

ஏ. எஸ். றஸாக் அம்பாந்தோட்டை

9-ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது எதிரிகளுக்கு எதிராக போராட்டம்! ஜிஹாத் பிரகடனம்!

--முஅம்மர்கதாபி--

1989 செப்டம்பர் 26ஆம் திகதி, சர்வதேச இஸ்லாமிய அழைப்பு நிறுவனம் - லிபிய அரபுக்குடியரசின் பெங்காஸி மாநகரத்தில் ''புதிய நூற்றாண்டின் நுழைவாசலில் இஸ்லாமிய பிரச்சாரம்'' என்ற, தொனிப்பொருளில் ஒரு மாநாட்டை ஏற்பாடு செய்திருந்தது.

சுமார் 46 முஸ்லிம் தேசங்களைச் சேர்ந்த 250 பிரதிநிதிகள் கலந்து கொண்ட இம் மாநாட்டில், இலங்கைப் பிரதிநிதிகளாக முஸ்லிம்காங்கிரஸ் தேசியத் தலைவர் எம். எச். எம். அஷ்ரஃப், நாடாளுமன்ற சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச். முகம்மது, ஜனாப், ஹலீம் இஷாக் எம். பி., ஜனாப். பாமிஸ் சுஹைர் சட்டத்தரணி

## உலகளாவிய முஸ்லிம் வெகுஜன தலைமைத்துவம். ஏகத்துவம்-அடிப்படை! அல்குர்ஆனும் ஹதீஸும் ஆதாரம்!

டாக்டர். எம், ஏ. எம். ஷுக்ரி (பணிப்பாளர், ஜாமியா நளீமிய்யா) ஆகியோர் கலந்து கொண்டனர்.

இம்மாநாட்டைஆரம்பித்து வைத்து உரைநிகழ்த்திய லிபியத் தலைவர், கேர்ணல் முஅம்மர் கத்தாபி அவர்கள், முஸ்லிம் ''உம்மா''வைஎதிர்கொண்டுள்ளசர்வதேச சவால்களையும்சிதறுண்டு நலிவடைகின்ற முஸ்லிம்உலகின் வாழாதிருக்கும் தன்மையையும் தெளிவாக எடுத்து விளக்கியதோடு அவசரமாகவும், அவசியமாகவும் முஸ்லிம் உலகம் ஏகத்துவத்தின் அடிப்படையில், அல்குர்ஆனின் நிழலில் ஐக்கியப்பட்டு, தமது பொது எதிரிகளுக்கு எதிராகப் போராட வேண்டும் என்றும் எடுத்துச் சொல்லி 'ஜிஹாத்' பிரகடனம் செய்து வைத்தார்.

இத்தகைய இலட்சியப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்காக சர்வதேச இஸ்லாமிய வெகுஜன தலைமைத்துவம் ஒன்றின் அவசியத்தையும் வலியுறுத்தினார். மாநாடு அவரது துணிகரமான இலட்சிய சிந்தனைகளை வரவேற்றதோடு, அத்தகைய தலைமைத்துவம் ஒன்றுக்கான செயல் திட்டங்களை ஆராய்ந்து ஒரு அறிக்கையை வெளியிட்டிருந்தது.

அந்த அறிக்கையின் பிரகாரம் மேற்படி தலைமைத்துவம் கீழ்வரும் ஒன்பது அடிப்படைகளைக் கொண்டிருக்க வேண்டும் என வலியுறுத்தப் பட்டுள்ளது.

1, அல்குர்ஆனும், சுன்னாவுமே முஸ்லிம்களின் ஷரீஆவாகும், அவை தவிர வேறு நிலையான அடிப்படைமார்க்கம் இஸ்லாமிய சமூகத்தில் இல்லை.

2. அல்லாஹ்வால் வழிகாட்டப்பட்ட இஸ்லாமிய ஷரீஆ மனிதகுலத்துக்கேயுரிய அருட்கொடையாகும். தனிமனித, சமூகபிணிகள் அனைத்திலிருந்தும் மனித குலத்தை மீட்கும் வல்லமை அதற்கு மாத்திரமே உண்டு.

-அல்ஷேய்க் இனாமுல்லாஹ்-

3. சர்வதேசமுஸ்லிம்வெகுஜனங்கள் அனைவரும் 'ஹிஸ்புல்லாஹ்' அல்லாஹ்வின்கட்சியைச் சேர்ந்தவர்கள். அல்லாஹ்வின் மார்க்கத்தை திக்கெங்கும் நிலைபெறச் செய்வதற்காக ஓரணி திரண்டு சகலவற்றையும் அர்ப்பணிக்கக் கூடியவர்கள்.

4. இஸ்லாம், உயரிய மனிதநாகரிகத்துக்கான அடிப்படைகளைக்கொண்டுள்ளது. அங்கு துறவறத்துக்கும் சந்நியாசத்திற்கும் இடமில்லை, அங்கு பிற்போக்குக்கும், அதிதீவிரவாதத்துக்கும் இடமில்லை, அது மனிதகுல சுபீட்சத்தை நாடும் நடுநிலையான மார்க்கமாகும்.

5. முஸ்லிம் உலகம், இஸ்லாம் கூறும் மனித உரிமைகளுக்காக தலைநிமிர்ந்து போராடவேண்டும். அதற்காக சகல முஸ்லிம் அமைப்புகளும் அணி திரளவேண்டும்.

6, முஸ்லிம் ஐக்கியத்தின் ஊடாக, செயல் திறன் வாய்ந்த முஸ்லிம் சர்வதேச சக்திகளைத் தோற்றுவிக்கஉழைப்பது கட்டாய கடமையாகும். அரபுலக ஐக்கியம், இந்த வகையில், முன்மாதிரியாக இருக்கவேண்டும். தற்போதைய பலகரப்பட்ட வித்தியாசமான போராட்டங்கள் இதற்குத் தடையாக அமையக்கூடாது. புரிந்துணர்வுடனும், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடனும் ஐக்கியப்படல் வேண்டும்.

7, இந்த தலைமைத்துவம் முஸ்லிம் உம்மத்தின் அரசியல், பொருளாதார சமூக கலை, கலாசார, வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் போன்ற சகல துறைகளிலும் அக்கறை செலுத்துவதோடு ஒடுக்கப்படுகின்ற முஸ்லிம் சமூகங்களுக்கு உதவியும் ஒத்தாசைகளும் வழங்குவதற்கு அதிகாரிகளை செலுத்தும்.

8. மகாநாட்டின் பேராளர்களிலிருந்து ஒரு பொதுக் செயலகம் தோற்றுவிக்கப் பட்டு, அதிலிருந்து தலைமைத்துவம் உருவாக்கப்படும். ஷுரா அமைப்பு முறையே அதன் செயற்பாடுகளின் நிர்ணய சக்தியாக இருக்கும்.

9. நிபந்தனையற்ற உலகளாவிய முஸ்லிம்களின் நன்கொடைகளும், உதவிகளும் இலட்சியங்களுக்கு முரண்படாத வகையில் கிடைக்கும் போது-அதுவே இந்த தலைமைத்துவத்துக்குரிய வருமானமாக கருதப்படும்.

இத்தகையஅறிக்கையொன்றை வெளியிட்ட மாநாடு வெகுவிரைவில் பிறிதொரு மகாநாட்டை நடத்துவதாகவும் தீர்மானித்திருந்தது. கடந்த மார்ச் மாதம் 17ம் திகதி திரிப்போலியில் மேற்படி மகாநாடு சர்வதேச இஸ்லாமிய அழைப்பு நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இலங்கைப் பிரதிநிதிகளாக சகோ. எம் எச் எம். அஷ்ரஃப் சட்டத்தரணி பாமிஸ் சுஹைர், ஜனாப் ஹலீம் இஷாக் எம் பி. ஆகியோர் கலந்து கொண்டனர். மேற்படி மகாநாட்டில் இலங்கை முஸ்லிம்களின் நிலைமைபற்றி விரிவானதொரு ஆய்வறிக்கையை சகோ. அஷ்ரஃப் அவர்கள் அரபு மொழியில் சமர்ப்பித்திருந்தார்கள்.

இலங்கை முஸ்லிம்கள் சகல சௌபாக்கியங்களுடனும் உரிமைபெற்று சுபீட்சமாக வாழ்கிறார்கள் என்று முன்னைய மாநாட்டில் கலந்து கொண்ட இலங்கைப் பிரதிநிதியொருவர் குறிப்பிட்டதும் சகோ. அஷ்றஃப், அவர்களினது உரையை மறுத்து சர்ச்சையை ஏற்படுத்தியதும் சகலரும் அறிந்த விடயமாகும்.

இம்மாநாட்டின் இறுதியில் உலகளாவிய இஸ்லாமிய வெகுஜனங்களின் தலைமைத்துவ அமையத்தைநிறுவுவதற்கான பொதுச் செயற்குழு தெரிவு செய்யப்பட்டது.

அந்த நிறைவேற்றுக்குழுவின் பொதுச் செயலாளர் நாயகமாக சர்வதேச இஸ்லாமிய அழைப்பு நிறுவனத்தின் பொதுச்செயலாளர் கலாநிதி அஹ்மத் ஷரீப் நியமனம் பெற்றார். ஏழு பிரதிப் பொதுச் செயலாளர்களும் தெரிவு செய்யப்பட்டார்கள். அவர்களுள் ஆசியப் பிராந்தியத்துக்குப் பொறுப்பாக சகோ. எம் எச் எம். அஷ்ரஃப் தெரிவுசெய்யப்பட்டார்:

சகோ- அஷ்ரஃப் அவர்களின் தெரிவு இலங்கைமுஸ்லிம்களின் இலட்சிய போராட்டத்துக்கு கிடைத்த மகத்தான சர்வதேச அங்கீகாரமாகும். சர்வதேச முஸ்லிம் உம்மத்தின் அங்கமாகிய இலங்கை முஸ்லிம் உம்மத்திலிருந்து ஒருவர் சர்வதேச தலைமைப் பதவிக்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள இவ் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு - இலங்கை முஸ்லிம்களுக்குகௌரவத்தையும், தன்னம்பிக்கையையும் பெற்றுத் தந்துள்ளதோடு ஏனைய சமூகங்களுக்கு ஒரு மகத்தான படிப்பினையையும் வழங்கியுள்ளது.

இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் மாபெரும் தியாகங்களோடும் மனத்தூய்மையோடும் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்திய சகோ. அஷ்ரஃப் அவர்கள் சர்வதேச முஸ்லிம் உம்மத்தின் வரலாற்றிலும் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்துவதற்கு தெரிவாகியுள்ளமை எல்லாம்வல்ல அல்லாஹ் அவருக்களித்த அளப்பரிய அருட்கொடையாகும்.

இஸ்லாமிய இலட்சியப் போராளிகளான துருக்கியின் இஸ்லாமியக் கட்சியின் தலைவர் டாக்டர் நஜிமுத்தீன் அர்கான், சூடான் இஹ்பானுல் முஸ்லிமீன் தலைவர் கலாநிதி ஹஸன் துராபி ஆகியோரும் மேற்படி நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்'

''இலங்கை முஸ்லிம்களின் ஐக்கியத்திற்தான் சர்வதேச முஸ்லிம் சமுதாயம்எம்முடன் இருக்கின்றது'' என்றுநாம் உணர்ந்து கொள்வதற்கும் இனி அதற்காக செயல் படுவதற்கும் இது நல்லதொரு சந்தர்ப்பமாகும்.' எமது இலட்சியப்போராட்டத்தில் பங்கெடுக்கவும்எங்களுக்குஉதவவும்சர்வதேசமுஸ்லிம் உலகம்காத்து நிற்கிறது'' என்பதற்கு இந்த நிகழ்வு ஒரு சிறந்த உதாரணமாகும்,

# துறைமுக ஊழியர்களின் வீடில்லாப்பிரச்சினை தீருமா?

அமைப்பாளர் "அருஸ்''

முப்பது வருடங்களுக்கு மேலாக கொழும்பு துறைமுகத்தில் வேலை செய்யும் ஊழியர்கள் தமக்கென்று சொந்தமான வதிவிட வசதியில்லாது துயரங்களைச் சுமந்து கொண்டு வாழ்ந்து வருகிறார்கள்.

கண்டி, காலி, பாணந்துறை, மள்வானை ஆகிய தூர இடங்களிலிருந்து வந்து கொழும்பில் அறை எடுத்து தங்கி துறைமுகத்தில் பணியாற்றும் இவர்கள் மிகவும் இக்கட்டான வாழ்க்கை வாழ்ந்து வருகிறார்கள். தமது வேதனத்தைக் கொண்டு வதிவிட வாடகை குடும்பச்செலவு ஆகியவற்றை எதிர்கொண்டு சமாளிக்க முடியாத நிலை இவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

சில ஊழியர்களுக்கு துறைமுக விடுதிகள் வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்த போதிலும் - அவர்கள் சேவையிலிருந்து இளைப்பாறும் காலம் கட்டத்தில் விடுதிகளை காலி செய்து விட வேண்டும். இதனால் இவர்கள் நிரந்தரமான வீட்டு வசதி பெற்றுக் கொள்ளமுடியாத அவலநில தொடரும் கதையாகத்தான் இருக்கிறது.

அரசாங்கம் வகுத்துள்ள பத்துலட்சம் வீட்டுத் திட்டத்தின் கீழ் - துறைமுக ஊழியர்களுக்காகவும் வீடுகள் அமைத்து, குறிப்பிட்ட தொகையில் அவைகளை வாடகைக்குவிட்டு குறிப்பிட்ட காலத்தின் பின்னர் அவர்களுக்கே சொந்த மாக்கிக் கொடுக்கும் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வர - அதற்கானசகல நடவடிக்கைகளையும் எடுக்குமாறு ஜனாதிபதி ஆர். பிரேமதாஸ அவர்களையும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர். எம் எச். எம். அஷ்றஃப் அவர்களையும் துறைமுக ஊழியர் காங்கிரஸ் அமைப்பாளர் ஜனாப். காமில் அறூஸ் கேட்டுள்ளார்.

## வீட்டுத்திட்டவேலைகளைஉடனே ஆரம்பிக்கவும்

மாசஉ. "நூபிமுகையதீன்'' அவர்கடிதமூலம்கேட்டுள்ளார்

ஏறாவூர் சதாம்ஹுஸைன் வீட்டுத்திட்ட வேலைகள் 1989ம் ஆண்டு ஆரம்ப காலப் பகுதியில் மேற்கொள்ளப் பட்டும், அது இன்னமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை எனவும் அவ்வேலைகளைத் துரிதமாக ஆரம்பிக்குமாறும் வடக்கு கிழக்கு மாகாணசபை காணி, வீடமைப்பு அமைச்சின் செயலாளர் திரு. கே, பரமானந்தன் அவர்களை மட்டக் களப்பு மாவட்ட மாகாண சபை உறுப்பினர் ஜனாப். எம். எஸ். ஏ.பி. முகைதீன்

ஒதுக்கப்பட்ட குறித்த அக் காணிகள் அளவைப் படுத்தப் பட்டு ஆணையாளரின் அங்கீகாரத்துடன் குறித்த அமைச்சுக்கு அனுப்பட்டிருந்தும்நாட்டில் நிலவிய அசாத்திய நிலைமை காரணமாக அது இடைநிறுத்தப்பட்டது எனவும மாகாண சபையின் புதிதாக நியமிக்கப்பட்ட செயலாளர்களின் கீழான நிர்வாகத்தில் அத்திட்டத்தை மீள நடைமுறைப்படுத்த ஆவன செய்யுமாறும் அவர் கேட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாறை மாவட்ட கிராமசேவகர் நியமனங்களை ரத்து செய்க!

மக்கள் மத்தியில்

(நமது நிருபர்)

## ஜனாதிபதிக்கு தலைவர் அஷ்ரஃப் கடிதம்

மக்களின் நலன்கருதி இந்த விடயத்தை - மாட்சிமை தங்கிய ஜனாதிபதியின் உடனடியான கவனத்துக்குக் கொண்டு வருகிறேன்.

தாங்கள் பதவியேற்ற காலத்திலிருந்து அதிக எண்ணிக்கையிலான கிராம சேவையாளர் நியமனங்கள், ஆட்சேர்ப்புக்கொள்கைக்கு மாறாக அம்பாரை மாவட்டத்தில் நடைபெற்றுள்ளன.

அம்பாரை மாவட்டத்தின் ஒரேயொரு தெரிவு செய்யப்பட்ட முஸ்லிம் எம். பியாக இருக்கின்ற நான்,இந்த விஷயத்தை பல சந்தர்ப்பங்களில் மாவட்ட அரசாங்க அதிபர், பொது நிர்வாக அமைச்சர் ஆகியோரின் கவனத்துக்கு கொண்டு வந்திருக்கிறேன்.

இந்த விடயம் மாகாண சபை நிர்வாகத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளதாக அமைச்சு எனக்குத் தெரிவித்துள்ளது. ஆனால் இதுவரையில் மாகாணசபை எந்தவொரு நியமனங்களையும் வழங்கவில்லை. என்பது அனைவரும் அறிந்த விஷயமாகும்.

ஆனால் உண்மையாகவே நடந்தது என்னவெனில், அரசாங்கத்தின் ஆட்சேர்ப்புக் கொள்கைக்குப் புறம்பாக பல நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளமை இங்கே கவனிக்கத்தக்கது. பொதுமக்களிடமிருந்து விண்ணப்பம் கோராமல் நேர்முகப்பரீட்சை நடத்தாமல் இவ்வாறான நியமனங்கள் நிகழ்ந்துள்ளன.

இது விடயம் தொடர்பாக எனது பகுதி முஸ்லிம்கள் மத்தியில் விரக்தியும், ஏமாற்றங்களும் வளர்ந்துள்ளன என்பதை ஜனாதிபதி அவர்களுக்கு இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மேலும் இந்த நியமனங்கள், ஐ. தே. க, ஆதரவாளர் என்ற அடிப்படையிலும் பெருமளவு இலஞ்சம் கொடுத்ததன் அடிப்படையிலும் நிகழ்ந்துள்ளன.

இத் தருணத்தில், எதிர்கால நியமனங்களை நிறுத்துமாறும், கடந்த ஜனாதிபதி தேர்தல் திகதியிலிருந்து வழங்கப்பட்ட நியமனங்களை இரத்துச் செய்யுமாறும், கடந்த ஜனாதிபதி தேர்தல் திகதியிலிருந்து வழங்கப்பட்ட புதிய நியமனங்கள் அனைத்தும் ''புதிய ஆட்சேர்ப்புக் கொள்கைக்கு'' அமைவாக இருக்க நடவடிக்கை எடுக்குமாறும் தங்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

# அமைச்சரிடம் ஏன் முறையிட்டாய்? புலிகள் கடும் சீற்றம்!

## தந்தையும் கடத்தப்பட்டார்!

ஓட்டமாவடி பிறைந்துரைச் சேனையைச் சேர்ந்த எம். சி. எம். ஜிப்ரி (23) எம். சி. எம். உவைஸ் (20) ஆகிய இளைஞர்கள், புலிகளால் கடத்தப்பட்டார்கள்.

உவைஸ், ஜனவரி 22 ஆந் தேதி தனது வீட்டிலிருந்தும் ஜிப்ரி, ஜனவரி 29ஆந் தேதி காத்தான்குடியில் வைத்தும் கடத்திச் செல்லப்பட்டனர். அத்துடன் 2000 ரூபா பெறுமதியான கைக்கடிகாரமும், மோட்டார் சைக்கிளும் அபகரிக்கப்பட்டன.

இது இவ்வாறிருக்க, அண்மையில் ஓட்டமாவடிக்கு விஜயம் செய்த அமைச்சர் ஷாஹுல் ஹமீதிடம் கடத்திச் செல்லப்பட்ட இளைஞர்களின் தந்தையான எம். எம். முகம்மது காஸீம் என்பவர், இந்தச்சம்பவம் குறித்து, முறைப்பாடு செய்திருக்கிறார். அதற்கு, தன்னாலான சகல முயற்சிகளையும் மேற்கொள்வதாக அமைச்சர் அவரிடம் உறுதியளித்துள்ளார்.

இந்த விஷயத்தை அறிந்த புலிகள், ''ஏன் அமைச்சரிடம் முறையிட்டாய்?'' என்று, சீற்றமடைந்து, பிள்ளைகளின் தந்தையான முஹம்மது காஸிமை தெருவில் நின்றபடியே பிடித்து, மோட்டார் சைக்கிளில் ஏற்றிக் கொண்டு போய் விட்டனர். இன்று வரையும் இவர்கள் மூவரும் என்ன ஆனார்கள்? என்று, தெரியவில்லை.!

அச்சம் - பயம் - பீதி காரணமாக, அந்த குடும்பத்தின் தலைவி, தனது ஐந்து பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு கொழும்பு வந்து சேர்ந்து, அழுது புலம்பியவண்ணம், முஸ்லிம் காங்கிரஸ் அலுவலகத்துக்கு வந்து தனது பரிதாப நிலையைத் தெரிவித்தார்.

பிந்தி கிடைத்த செய்திகளின்படி தந்தையான முஹம்மது காஸிம் மட்டும் விடுவிக்கப்பட்டதாக தெரிய வந்துள்ளது.

# தேசிய துணைப் படைவீரர்கள் கொழும்பில் நிர்க்கதி! இராணுவப் பாதுகாப்புடன் தலைநகர் வருகை!

எம்.எஸ்.எச், ஹாஜா
மா. உ

கடந்த காலத்தில் நாட்டில் நிலவிய பயங்கரவாதத்தை முறியடிப்பதற்கு தேசம் தழுவிய ரீதியில் தேசிய துணைப் படைக்கு அரசாங்கம் ஆட்களைத் திரட்டியது பொது மக்களுக்கு நினைவிருக்கலாம்

திருமலை மாவட்டத்திலிருந்து - கிண்ணியா,தோப்பூர், மூதூர், சேருவர, அலியொலுவ, கந்தளாய், தெஹிவத்தை, முள்ளிப்பொத்தானை, நிலாவெளி பகுதிகளிலிருந்தும் நூற்றுக்கணக்கான தமிழ், சிங்கள, முஸ்லிம் இளைஞர்களும் அப்படைக்கு விண்ணப்பித்து வீரர்களாகச் சேர்த்துக் கொள்ளப் பட்டனர். தற்போது அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் ஏற்பட்ட புது உறவு காரணமாக இந்தப் படைவீரர்கள் இந்தச் சேவையிலிருந்து தள்ளப்பட வேண்டி ஏற்பட்டுள்ளது.

இதனால் இப்போது எவ்விதமான கொடுப்பனவுகளுமின்றி - வருமானமில்லாத நிலையில் நிர்க்கதியாக விடப்பட்டுள்ளனர். இவர்களின் கண்ணீரைத் துடைத்தெறிய அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும்.

திருமலை மாவட்டத்தைச் சேர்ந்த நாற்பதுக்கும் மேற்பட்ட பதவி விலக்கப்பட்ட தேசிய துணைப்படைவீரர்கள், விடுதலைப் புலிகளின் பயமுறுத்தல்களினால் - தமது பகுதிகளில் இருந்தும் வெளியேறி இராணுவப் பாதுகாப்புடன் கொழும்பு வந்து சேர்ந்துள்ளனர்.

மாகாண சபை உறுப்பினர். எம். எஸ். எச். ஹாஜா தலைமையில் முஸ்லிம் காங்கிரஸ் அலுவலகத்துக்கு வந்த இவர்கள், தமது இக்கட்டான நிலை பற்றி தெரிவித்ததோடு இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சர். ரஞ்சன் விஜேரத்தினவுக்கும், ஜனாதிபதி ஆர். பிரேமதாச அவர்களுக்கும் தெரிவிக்கவிருப்பதாகவும் கூறினர்.

—ஏ. எல். அப்துல் மஜீத்
மா. உ.

# வட்டியில்லா வங்கி மாகாண சபையில் ஒரு விளக்கம்!

1962ல் கெய்ரோவில்தான், வட்டியில்லாத இஸ்லாமிய வங்கி முதன்முதலில் ஆரம்பிக்கப்பட்டது. அதன்பின்னர் முஸ்லிம் உலகத்தில் விஸ்தரிக்கப்பட்டது.

இஸ்லாமிய அபிவிருத்தி வங்கி, பைஸால் இஸ்லாமிய வங்கி, துபாய் இஸ்லாமிய வங்கி, போன்றவைகள்வட்டியில்லா அமைப்பிலேயே இயங்கிவருகின்றன.

நிதி, வங்கி வியாபாரம், கைத்தொழில், விவசாயம் போன்ற துறைகளில் ஷரியாவுக்கு அமைவாக இதுசெயற்படுகின்றது. வியாபார ஸ்தாபனங்கள், உற்பத்திநிறுவனங்கள் என்பனவற்றை இஸ்லாமிய அடிப்படையில் உருவாக்கி, வருமானத்தையும் சொத்தையும் பகிர்ந்துகொள்வதற்கும் மிகவும் முக்கியமாக வருமானச்சமமின்மையை நீக்கவும் இந்த வங்கி முறை உதவுகின்றது.

கூட்டுமொத்தத்தில் மக்களின் பொதுநலன் கருதி, அவர்களின் பொருளாதார நிலைமைகளை சீர்படுத்தும் வகையான எல்லா நடவடிக்கைகளையும் சர்வதேச மனிதாபிமான நோக்குடன் பல்வேறு நடவடிக்கைகளை இவ்வங்கி அமைப்பின் மூலம்மேற்கொள்ள முடியும்.

வட்டி வழங்குவதை முற்றாக நிறுத்திவிட்டால் மக்கள் தம்மிடமுள்ள பணத்தை இவ்வங்கிகளில் சேமிக்க முன்வரமாட்டார்கள் என்ற, ஒரு தப்பான அபிப்பிராயம் கூறப்படுகிறது. ஆனால், உண்மையில் வைப்புச்செய்யப்படும் பணம், தொழில், விவசாய அபிவிருத்தியால் முதலீடு செய்யப்படும் போது அதிலிருந்து கிடைக்கும் லாபம், வைப்பாளர்களுக்கு நிச்சயமாகவே வழங்கப்படுகின்றது.

வட்டியைப்பற்றி, அதிலுள்ள பெரும் அபாயத்தையும் அழிவையும் பற்றி, இஸ்லாம் திட்டவட்டமாக எச்சரிக்கை செய்திருக்கின்றது. வட்டியோடு தொடர்புடைய சகலகொடுக்கல்வாங்கல்களையும் இஸ்லாம் தடைசெய்து, மனிதகுலத்திற்குஒருநேர்வழி காட்டியுள்ளது.

வட்டி வாங்குபவன், அதற்காக ஒப்பந்தம் எழுதுபவன், சாட்சியாகஇருப்பவன் அனைவருமே சாபத்துக்குரியவர்கள் என்று நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கூறினார்கள். இஸ்லாம் மதம் மாத்திரமல்ல, சகல மதங்களுமே வட்டியை வெறுத்து, அதற்கு மாற்றுவழியாக ஒரு திட்டத்தை மனித சமூகத்துக்கு வழங்கியிருக்கின்றது.

# முஸ்லிம் மாணவர்கள் இனி இஸ்லாம் பாடம் எடுக்கலாம்!

சகோ. அபூபக்கர் எம்பி.

கிராண்ட்பாஸ் வடபகுதியில் அமைந்துள்ள விஜயபா மஹாவித்தியாலயம் அண்மையில் பொன்விழா கொண்டாடியது. பெரும்பான்மையாக சிங்கள மாணவர்களே கல்விகற்கும் இம்மஹாவித்தியாலயத்தில் முஸ்லிம் மாணவர்களும் கல்வி பயிலுகின்றனர். ஆனால் இதுகாலவரைக்கும் இஸ்லாம் பாடம்போதிப்பதற்கு ஆசிரியர் நியமிக்கப்படவில்லை, அதனால் புத்த சமயத்தையே ஒரு பாடமாகப் படித்து வருகின்றனர்.

இதை அறிந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளர் சகோ. ஏ.எம்.எஸ். உதுமான் மேற்கொண்ட நடவடிக்கையின் காரணமாக, இந்த விடயம்வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர். அல்ஹாஜ் எஸ்.எம்.எம் அபூபக்கர் அவர்களின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. அதைத் தொடர்ந்து பரீட்சைத் திணைக்களம்மேற்கொண்ட துரித நடவடிக்கை காரணமாக இம்மாணவர்கள் இஸ்லாம்பாடத்தை க.பொ, த.சா.த பரீட்சைக்கு எடுப்பதற்கு வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

எனவே இனி வருங்காலங்களில் முஸ்லிம் மாணவமாணவிகள் இஸ்லாம் பாடத்தையும் பரீட்சைக்கு எடுக்க முடியும்.

# மு.காங்கிரஸுக்கு புலிகள் தடையா?

ஏறாவூர் பிரதேசத்தில் முஸ்லிம் காங்கிரஸ் பத்திரிகைகளை விற்பனை செய்யக் கூடாது! என்று புலிகள் தடைவிதித்துள்ளதாக தெரிய வருகின்றது.

'ஜனநாயக வழிக்கு வந்துவிட்டோம்' என்று பேசிக்கொள்ளும் புலிகள் முஸ்லிம்களின் அடிப்படை உரிமையான கருத்துச் சுதந்திரத்தில் தலையிடுவது எந்த ஜனநாயகத்தில் இருக்கிறது?

முஸ்லிம் சமூகத்தின் ஒரே பேச்சாளன் முஸ்லிம் காங்கிரஸ் தான் என்று தமது முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகளை முஸ்லிம்கள் தெரிவு செய்ததன் மூலம் நிரூபித்துள்ளனர், இந்த நிலைமையில் முஸ்லிம் காங்கிரஸ் பத்திரிகையை தடைசெய்வது சூரியனை சுளகால் மறைப்பதற்கு எடுக்கும் முயற்சியைப் போன்றதாகும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமைச்சர் ஷாஹுல்ஹமீத் ஏறாவூர் விஜயம்!

# முஸ்லிம் காங்கிரஸ்காரரின் துணிச்சலைப் பாராட்டினர்!

கௌரவ உயர்கல்வி, விஞ்ஞான, தொழில்நுட்ப வியல் அமைச்சர் ஜனாப் ஏ. ஸி. ஷாஹுல் ஹமீது அவர்கள் அண்மையில் மக்கள் குறை கேட்கும் விஜயத்தை மேற்கொண்டு ஏறாவூர் சென்றிருந்தார்.

ஊரிலுள்ள பிரமுகர்கள் பலர், ஜனாப் செய்யது அலி மவ்லானாவின் தலைமையில் கூடி' ஏறாவூர் பிரதேசத்தில் என்றுமில்லாத அமைதியும், சௌஜன்யமும் நிலவுகின்றது என்றும்எங்களுக்கு எவ்விதமானபிரச்சினைகளும்கிடையாது என்றும் உண்மையை மறைத்து. பயத்தினால் வக்காலத்து வாங்கியிருக்கிறார்கள்! அந்தப் பிரதேசத்தைப்போலவே கூட்டத்திலும் மயான அமைதி நிலவியதாம்!

கூட்டம் முடிந்து திருப்தி அடைந்த அமைச்சர் புறப்படத் தயாரானபோது, மெல்லிய ஆனால் தீர்க்கமான ஒரு குரல்! தனக்கும் பேச சந்தர்ப்பம்தரும்படிகேட்டது. அமைச்சரும் மகிழ்ச்சியுடன் பேச அனுமதி வழங்கினார். 'ஒரு சுதந்திர நாட்டின் அடிமைகளாக முஸ்லிம் சமூகம், சுதந்திரக்காற்றைச் சுவாசிப்பதற்குத் துடிக்கின்ற கேவலமான இன்றைய நிலையைப் பற்றி அவர் ஆவேசமாகக் கண்டித்துப் பேசினார். உண்மைகளை உரத்துச் சொன்னார்.

'கப்பங்களினாலும் வரிகளினாலும் இடுப்பொடிந்து, நொந்து வெந்துபோயிருக்கும் நாங்கள், இங்கே நிம்மதியாக வாழவில்லை. துயரங்களையும்,கண்ணீரையும் அச்சத்தையும் இதயத்தில் சுமந்துகொண்டு செவிடர்களாக-குருடர்களாக ஊமைகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எமது மக்களின் முகங்களை நிமிர்ந்து பாருங்கள். அந்த முகங்களில் மகிழ்ச்சி இருக்கிறதா? இல்லை! நாளையப் பொழுது நம்பிக்கையற்ற பொழுதாகத்தான் விடிகின்றது!'

அந்தக் குரலின் ஆணித்தரமான பேச்சைக் கேட்டு சிலாகித்த அமைச்சர்; இப்படி எல்லாம் ஆக்ரோஷமாகப் பேசுவதற்கு முஸ்லிம் காங்கிரஸ் காரரினால் மாத்திரம்தான் முடியும்! வேறு எவராலும் முடியாது என்று பலத்த கரகோஷம் ஆரவாரத்துக்குமத்தியிலே குறிப்பிட்டார்.

யதார்த்த நிலைமையை மூடிமறைத்து பொய்மூட்டைகளை அவிழ்த்துவிட்ட வால்பிடிகளின் முகங்களெல்லாம் வெட்கத்தால் இருண்டுபோயினவாம்!

அதன் பின்னர், கூட்டத்தில் சமூகமளித்திருந்த ஜனாப் ஜெமீல் ஆசிரியர், அகமது லெப்பை ஆசிரியர் முன்னாள் ஏறாவூர் பட்டின சபை அக்கிராசனர், ஜனாப் எம்.ஏ.சி.ஏ. றஹ்மான் ஆகியோரும் தமது கருத்துக்களை சுதந்திரமாக வெளிக்காட்டி உரைநிகழ்த்தினர்.

## 'மனிதனை கொலை செய்வதுமட்டுமல்ல,

# சிறுபான்மைமக்களின் அடிப்படை உரிமைகளை மீறுவதும் மனிதஉரிமை மீறல்கள்தான்!"

பொதுச் செயலாளர்
எம்ஜேஎம். ஷஹீத்

இந்நாட்டில் மீண்டும் ஜனநாயகத்தை நிலை நாட்டுதல், அடிப்படை மனித உரிமைகளைப் பேணிக்காத்தல், வாழ்க்கைச் செலவு போன்ற முக்கிய தேசியப் பிரச்சினைகளில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் அதிக ஊக்கமும் கவனமுஞ் செலுத்துகின்றது. இம்மூன்று பிரச்சினைகளுக்கும் தீர்வு காணும் நோக்குடன் எங்கள் கட்சி வகுத்துள்ள திட்டத்தின் பிரகாரம் நாம் நடவடிக்கை முயற்சிகளில் ஈடுபட்டுள்ளோம் என்பது நீங்கள் அறிந்த விஷயமே.

1990 - 2 - 14 ஆந் திகதி மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களால் கூட்டப்பட்ட சர்வ கட்சி மாநாட்டில், வாழ்க்கைச் செலவு அத்துமீறி ஏறிக் கொண்டு போவதைப் பற்றி முஸ்லிம் காங்கிரஸ் பிரஸ்தாபித்துள்ளது.

வட்டியில்லா அடிப்படையில் இந்த நாட்டின் பொருளாதாரக் கொள்கையை நிர்மாணிக்க வேண்டும் என்பதை நாம் ஆதரிக்கின்றோம். வாழ்க்கைச் செலவைக்குறைப்பதற்கும் தொழிலில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்கும் சாத்தியமான ஒரே ஒரு வழி இதுதான் என்பது எங்கள் கொள்கையாகும்.

சட்டபூர்வமான ஆட்சி முறையை நிலை நாட்ட வேண்டும் என்பது எங்களதும் கோரிக்கையாகும். ஆதலால், தற்போது தலைதூக்கி நின்று தாண்டவமாடும் வன்செயல்களை நிறுத்துவதற்கான முயற்சியெடுக்கும் எல்லா அரசியல் கட்சிகளுடனும் குழுக்களுடனும் இணைந்து ஒத்துழைக்க எமது கட்சிக்குக் கடமைப்பாடுண்டு. மனிதனைக் கொலை செய்வது மட்டுமல்ல, சிறு பான்மை மக்களின் அடிப்படை உரிமைகளை மீறுவதும் மனித உரிமை மீறல்களாகவே நாம் கருதுகின்றோம்.

ஸ்ரீ லங்காவில் சிறுபான்மைத் தமிழர்களின் அரசியல் உரிமைகள் மீறப்படுவது மாத்திரமல்ல, வடக்கிலும் கிழக்கிலுமுள்ள சிறுபான்மையிலும் சிறுபான்மையினரான முஸ்லிம்களையும் ஆயுதந்தாங்கிய தமிழ்த்தீவிரவாதிகள் அச்சுறுத்தி தங்கள் அடாவடித்தனத்துக்குள்ளாக்கிக் கொண்டிருக்கும் இந்த வேளையில் நீங்கள் இந்த மாநாட்டைக் கூட்டியது மிகவும் பொருத்தமாகும்.

மனித உரிமைகள் மீறப்படுவதை நிறுத்தி, அடிப்படை உரிமைகளை நிலை நாட்டும் நோக்கத்துடன் கூட்டு முயற்சியும், ஒரு வேலைத்திட்டமும் வகுக்கும் குறிக்கோளுடன் சகல அரசியல் கட்சிகளும் செயல்பட வேண்டும்.

இந்த அடிப்படையில், எல்லா அரசியல் எதிர்க்கட்சிகளும் அழைக்கப் படாமலிருப்பதால், இது பொதுமக்களிடையே ஒரு தப்பான அபிப்பிராயத்தை ஏற்படுத்த ஏதுவாகும். என்பது, எங்கள் கருத்தாகும்.

9ம் பக்கம் பார்க்க

# பிஞ்சுகளோடு பேசுவோம்!

## நம்பினால் நம்புங்கள் ஆனால் உண்மை!

### பெப்ரவரிமாதம் பூரணை இல்லை!

உலக சரித்திரத்தில் 1866ம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் ஒரு விஷேசம் நடந்தது! அந்த மாதத்தில் பூரணை இருக்கவில்லை எப்படித் தெரியுமோ?

ஜனவரி மாதத்தில் இரண்டு பூரணை இரவுகளும் மார்ச் மாதத்தில் இரண்டு பூரணை இரவுகளும் இருந்தன. ஆனால் பெப்ரவரி மாதத்தில் பூரணை இருக்கவில்லை.

அதே மாதிரி இன்னும் ஒரு முறை நிகழ்வதற்கு 2,500,000 ஆண்டுகள் கழியவேண்டும் என, வான சாத்திர நிபுணர்கள் கணக்கிட்டிருக்கிறார்கள். இதை எங்கே நாம் காணப் போகிறோம்?

### ஒய்வே இல்லை!

வாரத்திலுள்ள ஒவ்வொரு நாளும் ஒய்வு நாள்தான்! எங்கேயாவது, யாருக்காவது ஒருநாள் ஓய்வுநாளாகவே இருக்கிறது!

ஞாயிற்றுக்கிழமை கிறிஸ்தவர்களுக்கு ஓய்வுநாள், திங்கட்கிழமை கிரேக்கர்களுக்கு ஓய்வுநாள், செவ்வாய்க்கிழமை பாரசீகருக்கு ஓய்வுநாள் புதன் கிழமை அஸீரியருக்கு ஓய்வுநாள், வியாழக்கிழமை எகிப்தியருக்கு ஓய்வு நாள், வெள்ளிக்கிழமை முஸ்லிம்களுக்கு ஓய்வுநாள், சனிக்கிழமை யூதர்களுக்கு ஓய்வு நாள்.

### மிருகங்களுக்கும் தூக்குத் தண்டனை!

"ஒரு எருது, ஒரு மனிதனை கொலை செய்தால் அந்த எருதை கல்லெறிந்து கொல்லவேண்டும். அதன் இறைச்சியை ஒருவரும் சாப்பிடக்கூடாது" இது, மோசேயின் மூஸா நபி (அலை) சட்டம் என்று,வேதாகம நூலான பைபிள் பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ளதாம்.

மத்திய காலத்தில்

இந்த அடிப்படையில், மிருகங்கள் நீதிமன்றங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டதாக வரலாறு, கூறுகின்றது.

1314ஆம் ஆண்டில் பிரான்ஸ் தேசத்தில் ஒருமனிதனை குத்திக்கொன்ற குற்றச்சாட்டின் பேரில் ஓர் எருது தூக்கிலிடப்பட்டது.

1457ஆம் ஆண்டில், ஒரு குழந்தையைக்கொன்று, சாப்பிட்டுவிட்டன.ர் என்ற குற்றத்திற்காக ஒரு பெண் பன்றிக்கும், அதனுடைய ஆறு குட்டிகளுக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டது.

இளம் வயதினராகையால் குட்டிப் பன்றிகள் மரண தண்டனையிலிருந்து தப்பித்துக் கொண்டன, தாய்ப்பன்றி தூக்கிலிடப்பட்டது!

-சுபைதா மணாளன்.

## இவர்கள் யார்?

பேரினவாத நாய(க்)கரின்
விஷமப் பழியை
மொழி மெருகூட்டும்-சில
முனாபிக்குகள்!

அந்த நாய(க்)கரின்
கால்களின் கீழ்
ஒட்டி வாழும்
ஒட்டுண்ணிகள்!

நம் சமுதாய வயலில்
வேளாண்மைத் தோற்றத்தில்
வளர்ந்துள்ள நெற்சப்பிகள்
களைய வேண்டிய
களைகள்!

பட்டம் பறிப்பாரோ
என பயந்து
குட்டுப் படும் கோழைகள்!
'நிறைவேற்று' மகுடியின்முன்
நின் றாடும் நாகங்கள்!

சமுதாயத்தை
சீர் குலைக்க
'லைசன்ஸ்' பெற்ற
கோடரிச் சனியன்கள்!

அந்த நாய(க்)கர்களின்
பதவிக் கள்ளை,
பருகிப் பழகிய
இந்த அடிவருடிகளுக்கு
சமுதாய ஒற்றுமையில்
சமைக்கப்படும்
சத்துள்ள தேன் மகிமை
தெரிய மாட்டா . . .

ஒரு வேளை இந்த
வஞ்சகர்கள், செஞ்சோற்றுக்கடன்
செலுத்துகிறார்களோ?

-பொத்துவில் பைறூஸ்

. . . . லைஸன்ஸ் பெற்ற கோடரிச் சனியன்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈபிஆர்எல்எப்பிடம் அலாவுதீனின் அற்புதவிளக்கு இல்லை!

## வடக்குகிழக்கு மாகாணசபை எதிர்க்கட்சித் தலைவர், ----சேகு இஸ்ஸதீன்.

'அரசு பாதுகாப்பை உறுதிப்படுத்தினால் மாகாண சபைக் கூட்டம் வைக்கத் தயார்' என்றுவிடப்பட்டுள்ள அறிக்கை மூலம் ஈ. பி. ஆர். எல்.எப்.வட-கிழக்குமாகாண மக்களின் எதிர்காலத்தைக் கேலிக்கூத்தாக்க முனைவதாகத் தெரிகிறது'' என்று வட-கிழக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவரும், முஸ்லிம் காங்கிரஸ்தவிசாளருமான சட்டத்தரணி எம்.எச். சேகு இஸ்ஸடீன் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ளஅறிக்கையொன்றில் கூறியுள்ளார். அவர் அறிக்கை தொடர்ந்து கூறுவதாவது:

### ஈழப் பிரகடனம்

1990 மார்ச் 1ஆம் திகதியிலிருந்து வடக்கு, கிழக்கு மாகாண சபையானது தன்னாதிக்கமும், இறைமையுமுடைய ஈழ ஜனநாயகக் குடியரசின் தேசிய அரசுப் பேரவையாக செயல்படும் என, ஈபிஆர் எல் எவ்வினரால் பிரகடனப்படுத்தப்பட்டது.

28.2.1991 வரை இச்சபையானது தன்னாதிக்கமும், இறைமையுமுடைய சுதந்திர ஈழ ஜனநாயகக் குடியரசின் அரசியல் யாப்பு நிர்ணய சபையாகவும் செயல்படும் எனவும் அதில் கூறப்பட்டது

### 19 கோரிக்கை

மேற்குறிப்பிட்ட ஓராண்டு கால எல்லைக்குள் ஸ்ரீலங்கா அரசானது, இச்சபையினால் முன்வைக்கப்பட்ட 19 கோரிக்கைகளையும் முழுமையாகவும், முறையாகவும் நிறைவேற்றுமாயின் மட்டுமே மேற்குறிப்பிட்ட இரண்டு பிரகடனங்களையும் இச்சபை மீளாய்வு செய்யவும், வடக்கு கிழக்கு மாகாணசபையென செயல்படவும் தயாராக இருக்கிறது என்பதையும் ஈபீ ஆர். எல். எப். பிரகடனப் படுத்தியது.

### அலாவுதீனின் அற்புத விளக்கில்லை!

மேற்சொன்ன பிரகடனங்களை விடுத்த சூடு தணிவதற்கு முன்னால் ஈ. பீ. ஆர். எல்.எப். கூட்டம் கூண்டோடு கைலாசம் போனாற் போல இந்தியத் தமிழ் நாட்டுக்கு அடைக்கலம் கேட்டுச் சென்று தமது சகோதர தமிழர்களாலேயே அடைக்கலம் மறுக்கப்பட்டு, ஓரிஸ்ஸாவில் ஒளித்திருக்க வேண்டிய கதி ஏற்பட்டது அனைவரும் அறிந்ததே.

இந்தியாவில் இருந்து கொண்டு தன்னாதிக்கமும், இறைமையுமுடைய சுதந்திர ஈழ ஜனநாயக குடியரசை ஒரு வருடத்துள் கேட்டதெல்லாம் கொடுக்கும் கற்பக தருவையோ, அல்லது அலாவுதீனின்அற்புதவிளக்கையோ கொண்டு, ஈ பீ ஆர் எல் எவ். உலகத்தை ஒரு கலக்கு கலக்கப் போகிறார்கள் என்று சிலர் எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர்!

### நட்டாற்றில் கைவிட்டனர்

ஆனால், அந்தோ பரிதாபம்! வீராவேசமான பிரகடனங்களை விடுத்து ஒன்றரை மாதம் கூட ஆகவில்லை. ஈழ ஜனநாயகக் குடியரசையும்' அதன் தேசிய அரசுப் பேரவையையும்,அதுவரையவுள்ள சுதந்திர ஈழ ஜனநாயகக்குடியரசின் அரசியல் யாப்பு நிர்ணய சபையையும் அம்போ என்று நட்டாற்றில் கைவிட்டு இலங்கையரசின் காலில் வீழ்ந்து ''நாம் மாகாண சபைக் கூட்டம் நடாத்தத் தயார்: எங்களுக்கு அரசுபாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும்'' என்று கெஞ்சோகெஞ்சென்று கெஞ்சிக் கேட்பது, ஈ பீ ஆர் எல் எப் எவ்வளவு பரிதாபகரமான நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளது என்பதற்கு, தக்க சாட்சியமாகும்.

பாரபட்சமும், பேராசையும், தவறான கணிப்பும், அரசியல் அவிவேகமும் அதிகார மமதையும், முஸ்லிம் சமூகப்படுகொலைகளும், கொள்ளைகளும் ஈ பீ ஆர் எல் எப் மாகாண சபை ஆட்சியை இழக்க நேர்ந்த காரணங்களிற்சிலவாகும்.

### முஸ்லிம்களையும் பகைத்தனர்!

தனது அதிகாரத்துக்குக் கீழுள்ள பொலிஸ் நிலையங்களையே தனது கூலிப்படைகளைக் கொண்டு தாக்கித் தோற்கும் முட்டாள்தனத்தை ஈ பி ஆர் எல் எவ் வும் அதனம் செய்து, அகப்பட்டதை வாரிச் சுருட்டிக் கொண்டு ஓடியபோது ஈபீக்கு இந்த ஞானோதயம் ஏற்படாதது ஏன்?

### புலிகளின் பாய்ச்சல்

இன்று, வடக்கு - கிழக்கில் தமிழ் மக்களிடையே புலிகளுக்கு மவுசு ஏற்பட்டுள்ளது. இதனால், புலிகள் இலங்கையரசை மதிக்காமற் செயற்படக் கூடிய சூழ்நிலை வளர்ந்து வருகிறது. புலிகளின் இந்தப் பாய்ச்சலைத் தடுத்துச் சிக்கலை ஏற்படுத்த மாகாணசபையை கலைக்கவிடாதுசதிசெய்ய ஈ பீ நினைக்கிறது. மாகாண சபைக்கு வருவதற்கு அனைத்து அருகதைகளையும் இழந்துள்ள வெட்கங்கெட்ட ஈ பீ வட-கிழக்கு மக்களின்நலனை பற்றி அறவே சிந்தித்துப் பார்ப்பதாக இல்லை!

## அம்பாரை மாவட்டத்திலுள்ள முஸ்லிம் பிரதேசப் பொலிஸ் நிலையங்களைத் தாக்கி முஸ்லிம் பொலீஸ் காரர்கள் 42 பேரைத் தனியாகப் பிரித்தெடுத்து முட்டாள் தனமான அரசியல்-இனப்படுகொலை செய்ததும் இதே ஈபிஆர்எல்எப்தான்!

மாகாணசபை ஆட்சியில் தாம் இருக்கும்போது இதுவே சாசுவதம் என்று நிலத்தில் கால் படாது பறந்து திரிந்த ஈபீக்குவந்த கேட்டை நினைக்கப் பாவமாய் இருக்கிறது!

### அரசியல்ஞானம் இல்லை!

மாகாண சபையை நடாத்துவதற்கு ஈ பி ஆர் எல் எப்புக்கு எந்தத் திறமையுமே இருக்கவில்லை. வடக்கு-கிழக்கு மாகாண மக்களின் நலன் கருதி ஈ பீ ஆர் எல் எப்புக்கு முஸ்லிம் காங்கிரஸ் அளிக்க இருந்த உதவியைக்கூடகண்டு கொள்ளக் கூடிய அளவுக்கு அரசியல் ஞானம் பெற்ற யாரும் அவர்களிடம் இருக்கவில்லை. தகுதியின்மையும் திறமையின்மையும், ஊழலும் சகபாடிகளும் மட்டும்தான் செய்ய முடியும்.

### அதிகார வெறி!

அம்பாறை மாவட்டத்திலுள்ள முஸ்லிம் பிரதேசப் பொலிஸ் நிலையங்களைத் தாக்கி முஸ்லிம் பொலிஸ் காரர்கள் 42 பேரைத்தனியாகப் பிரித்தெடுத்து முட்டாள் தனமான அரசியல் இனப்படுகொலை செய்ததும் இதே ஈ பி ஆர் எல் எவ் ஆட்சிதான்!

எவ்வாறாயினும் அதிகாரத்தில் இருக்க வேண்டுமென்பதற்காக இன்று இலங்கையரசின் காலில் பகிரங்கரமாக மண்டியிடுவதும் இந்த ஈ. பீ. ஆர் எல் எப் தான்! ஆனால், ஆறாவது அரசியல் திருத்தச் சட்டத்துக்கு விரோதமாக வீறாப்புப் பேசி ஈழப்பிரகடனம் செய்து, ...

ஈ பீ ஆர் எல் எப் இன்று செய்ய வேண்டியதெல்லாம் வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் ஒற்றுமையை உறுதிப்படுத்த விடுதலைப் புலிகளோடு நிபந்தனையற்ற முறையில் இணைவதுதான்! அத்தோடு, வடக்கு-கிழக்கில் வாழும் முஸ்லிம்களின் விடயத்தில் தாமும் தலையிடாமல், விடுதலைப் புலிகளையும் தலையிடவிடாமல், இப் பிரதேச மொத்த நன்மைக்கு உழைக்க ஈ பீ ஆர் எல் எப் முன்வரவேண்டும்!

மாகாண சபையை நடாத்தத் தயாரெனக் கூறும் ஈ பீ ஆர் எல் எப் பின் கோரிக்கையை இலங்கை அரசாங்கம் அறவே சட்டை செய்யத் தேவையில்லை.

---

# படுகொலை செய்யப்பட்ட தியாகிகள் நினைவாக... க'த்தமுல்குறான்!

முஸ்லிம் காங்கிரஸின் படுகொலை செய்யப்பட்ட இரு மாகாண சபை உறுப்பினர், கள், காரைதீவுஉப பொலிஸ், நிலையத்தில் கொல்லப்பட்ட 42 முஸ்லிம் பொலிஸ் வீரர்கள்,மற்றும் சமூக விடுதலைப் போராட்டத்தில் அண்மைக் காலத்தில் அகால மரணமடைந்த சகோதரர்களின் நினைவாக ''ஹத்தமுல் குர் ஆன்'' வைபவமொன்றை ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஏற்பாடு செய்துள்ளது.

எதிர்வரும் 22 ம்திகதி.ஞாயிற்றுக்கிழமை பி. ப. 4. 30 மணிக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் டாம் வீதி தலைமையகத்தில் நடைபெறும் இந்த ஹத்தமுல் குர்ஆன்'' வைபவத்தில் உயிர் நீத்த தியாகிகளது குடும்பத்திலிருந்தும் பிரதி நிதிகள் அழைக்கப்பட்டுள்ளனர். முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் அதியுயர்பீட அங்கத்தவர்கள் அரசியற் குழு அங்கத்தவர்கள். மாகாண சபை உறுப்பினர்கள், எம். பிக்கள் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், தவிசாளர், செயலாளர்கள் உட்பட பலர் இதில் கலந்து கொள்வர்,

அம்பாறை மாவட்ட மாகாணசபை உறுப்பினர் சகோ. எம்.ஐ. அலி உதுமான் கடந்த வருடம் ஓகஸ்ட் முதலாம் திகதியும் சகோ. எம். வை. எம். மன்சூர் இவ்வருடம் ஜனவரி முப்பதாம் திகதியும் பயங்கரவாதிகளால் படுகொலை செய்யப்பட்டதும் சீனன் கோட்டை பேருவலையைச் சேர்ந்த சகோ. எம். ஐ, எம். நௌபர் பொதுத் தேர்தலைத் தொடர்ந்து நடைபெற்ற வன்செயலில் கொல்லப்பட்டதும் தெரிந்ததே!

22ந் திகதி ஞாயிற்றுக் கிழமை 4.30 மணிக்கு ஆரம்பமாகும் ஹத்தமுல் குர் ஆன் வைபவத்தினைத்தொடர்ந்து ''இப்தார்''வைபவமும்,மஹ்ரிப் தொழுகையைத் தொடர்ந்து இராப்போசனமும் வழங்கப்பட்டு ஹத்தமுல் குர்ஆன் வைபவம் நிறைவு பெறும்.

---

## பஜேறோ வாகனத்தைப் பறிக்கும் முயற்சி! மயிரிழையில் தப்பியது! புறக்கோட்டையில் பயங்கரம்!

வடக்கு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஜனாப் எம், எம். ஆதம்பாவாவுக்குச் சொந்தமான பேஜறோ வாகனத்தைப் பயங்கரவாதிகள் கடத்திக்கொண்டு செல்லும் முயற்சி மயிரிழையில் தப்பியது.

ஜனாப் ஆதம்பாவா அவர்கள் தொழுகையை நிறைவேற்ற புறக்கோட்டையிலுள்ள பள்ளிவாசலுக்குச் சென்றிருந்தார். இதேவேளை வாகனத்தின் சாரதி, தனக்குத் தேவையான பொருள் ஒன்றை வாங்குவதற்காக ஒரு வழியால் சென்று கொண்டிருந்தார். அவரை ஏற்கனவே நோட்டமிட்டுக்கொண்டிருந்த சில தமிழ்ப் பயங்கரவாதிகள் இடைவழியில் அவரை இடைமறித்து கைத்துப்பாக்கியைக் காட்டிப் பயமுறுத்தி வாகனத்தின் சாவியைக் கேட்டிருக்கிறார்கள். செய்வதற்கு ஏதுமறியாத சாரதி, அச்சதின் காரணமாக சாவியைக் கொடுத்துவிட்டார்.

தொழுகை முடிந்து திரும்பி வந்த ஜனாப் ஆதம்பாவா விடம் நடந்தவற்றை சாரதி விபரித்துச் சொன்னார். உடனே அவர் வாகனம் நிறுத்தப்பட்டிருந்த இடத்துக்கு விரைந்து வந்து,வாகனம் நிற்பதைக்கண்டு திருப்தியடைந்தபின்னர் அருகில் நின்ற பொலிசாரிடம்தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டு நடந்தவற்றை விரிவாக எடுத்துச் சொன்னார்,

பிறகு பொலிஸ் பாதுகாப்புடன் வேறு பூட்டு மாற்றப்பட்டு புதிய சாவியிட்டுத் திறந்து வாகனம் எடுத்துவரப்பட்டது. சாவியைப் பறித்துக்கொண்டவர்களின் பிரயத்தனம் வெற்றியளிக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கானிஸ்தானில் முஸ்லிம் சகோதரத்துவம்!

''ஒரு கையில் திருக்குர்ஆனையும் மறுகையில் காசோலையையும் ஏந்தியவர்களாக ஏராளமான மக்கள் ஆப்கான் முஜாஹிதீன்களோடு இருக்கின்றனர்!''

ஆப்கன் வந்து சேர்ந்துள்ள குறிப்பாக,- அரபு நாட்டு சகோதரர்களைப் பற்றி SANDY GALL என்ற எழுத்தாளர் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

வெளிநாடுகளிலிருந்து ஆப்கன் வந்துள்ள சகோதரர்கள் தம் முகாம்களுக்கு ''மன்ஸாரில் அன்ஸார்'' (அல்லாஹ்வின் உதவியாளர்களின் முகாம்) என்று பெயரிட்டு அழைக்கின்றனர்.

## மதினாவிலிருந்து

மதீனாவிலிருந்து வந்த சகோதரர்களின் தலைவரான அபூ அப்துல் றஹ்மான் என்ற ஜித்தாவைச் சேர்ந்த சகோ. இரகசிய தகவல்களைச் சேர்த்துத் தருவதில் பெரும் பங்காற்றி வருகிறார். இவர் காபுலுக்கு அருகிலுள்ள நெடுஞ்சாலையில் முகாம் அமைத்துக் கொண்டு தங்களது இரவு நேர தாக்குதலின் மூலம் ரஷ்யர்களுக்கு சிம்மசொப்பனமாக இருந்துவருகிறார்!

## எகிப்திய சகோதரர்

''ஆப்கானிஸ்தான் முஜாஹிதீன்களும் நாங்களும் ஒரே ஜிஹாதில்தான் கலந்து கொண்டிருக்கிறோம். ஆப்கன் முஜாஹிதீன்கள் இந்த ஜிஹாத்தை நீடிக்க விரும்பும் போது நாங்களும் கூட இருந்து போராடுவோம்.'' என்று அபூ அப்துல்லா என்ற, எகிப்திய சகோதரர் கூறுகிறார்.

இவருடைய தலைமையில் பல அதிரடித்தாக்குதல்கள் நடத்தப்பட்டு பாரிய வெற்றிகள் குவிக்கப்படுகின்றன. பத்திரிகை நிருபர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பின்வருமாறு கூறினார்.

'நாங்கள் முதன்முதலாக தாக்குதலை நடத்தும்போது, ரஷ்ய வீரர்கள் பயன்படுத்திய அதிசயமான ஆயுதங்களைக் கண்டு, சற்றுத் திணறினோம். எனினும் அல்லாஹ்வின் மீது உறுதியான நம்பிக்கை கொண்டு, போராடினோம், அந்த தாக்குதலில் நாங்கள் வென்றோம் என்று சொல்வதற்கில்லை. அல்லாஹ் எங்களைக் காப்பாற்றினான்.

அல்லாஹ்வை மட்டுமே நாங்கள் சார்ந்திருக்கிறோம் என்பதே முதலாவதும் முடிவானதுமான பலமாகும்.

அல்லாஹ், ஆட்பலம், ஆயுதபலம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு வெற்றிகளை வழங்குவதில்லை. நாங்கள் காட்டும் ஒழுக்கம் அவன் மீது வைக்கும் உறுதியான நம்பிக்கை ஆகியவற்றைக் கொண்டே வெற்றிகளை வழங்குகிறான்!

அடுத்தடுத்து நாங்கள் அடைந்த வெற்றிகளுக்கு அல்லாஹ்வே காரணம், இந்த நம்பிக்கைதான் எங்கள்வெற்றியின் ரகசியம்!''

## எமன் சகோதரர்

''ஆப்கானிஸ்தானில் எங்கள் சகோதரிகளும்சகோதரர்களும் ஆக்கிரமிப்பிற்கும் அடக்குமுறைகளுக்கும் ஆளாக்கப்படுகிறார்கள் என, கேள்விப்பட்டேன். அந்த சகோதரிகளும் ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக போராடுகின்றனர் என்றும் கேள்விப்பட்டேன். ஆகவே, அவர்களோடு சேர்ந்து ரஷ்ய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராகப் போராடி அல்லாஹ்வின் பாதையில் மரணத்தைதழுவுவதற்காகவே வந்துள்ளேன்!

## முஸ்லிம் உலகம்

## ''அபூலயானா''

ஆப்கானிஸ்தான் ஜிஹாதில் நாம் வெற்றிபெற்றபின்னர், உலகில் வேறு எங்காவது எங்கள்சகோதரர்கள் அநீதிக்குள்ளாக்கப்பட்டால் அங்கு சென்று அவர்களுக்காக போராடுவேன்!''

இத்தனை துடிப்போடு, ஜிஹாதில் கலந்து கொள்ளும் இவருக்கு எத்தனை வயது தெரியுமா? ஆக அறுபது!

''ஜிஹாத்தின் உலகத் தூதர்'' என்று சகோதர முஜாஹிதீன்கள் இவரை அழைக்கின்றனர்.

## ஜோர்தான் இஹ்வானுல் முஸ்லிமீன்

ஜோர்தான் நாட்டு முஜாஹிதீன்களில் ஒருவர், ஜோர்தான் இஹ்வானுல் முஸ்லிமீன் இயக்கத்தைச் சேர்ந்தவர், அவர் தனது குடும்பத்தவர்களுக்கு எழுதிய ஒரு கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டார்.

''நமது சகோதரர்களை ஆக்கிரமிப்பிலிருந்தும் அநீதியிலிருந்தும் காப்பாற்றுவதற்கு நாட்டை விட்டுப் புறப்பட்டேன். நமது வீட்டில் துக்கம் திரைபோடுவதற்கு அனுமதித்து விடாதே! நீ மனந்தளர்ந்தால் நமது மழலைகளும் மனந்தளர்ந்து விடுவார்கள், மகன் மூத்தவன், குடும்பப்பொறுப்பை நிறைவேற்றி வருவான்என்று நம்புகிறேன்.

அவனிடம், ''எனது இந்த வீரமரணத்திற்தான் எனக்கு வெற்றி இருக்கிறது என்று, சொல்!

ஜிஹாத்தில் கிடைக்கும் மரணம்தான், இம்மையிலிருந்து விடுதலை பெற்றுத்தரும் மாமருந்து! அல்லாஹ்வையே சார்ந்து வாழுங்கள்! மறுமையில், அல்லாஹ்வின் முன் வரும்வரை எனக்கு விடை கொடுங்கள்!!

## முஸ்லிம் டாக்டர்கள்

உலக அரங்கில் பல்வேறு பகுதிகளிலும் பணிபுரிந்து கொண்டிருந்த முஸ்லிம் டாக்டர்கள் தங்கள் பணிகளை உதறித் தள்ளிவிட்டு, ஆப்கன் முஜாஹிதீன்களுக்கு பணியாற்றுவதற்காக சென்றுள்ளனர்.

இவர்களெல்லாம் செய்யும் தியாகங்களுக்கு அல்லாஹ் ஒருவனே கூலிவழங்கவேண்டும்.

## காஷ்மீர் செல்ல முடியவில்லை

இந்திய அனைத்துக் கட்சிகளின் தூதுகோஷ்டி ஒன்று காஷ்மீர் நிலவரத்தை அறிவதற்காகச் சென்றது அதில் ராஜீவ் காந்தியும் அடங்கியிருந்தார்.

தீவிரவாதிகள், தூதுகோஷ்டியினரை வெளியே வர அனுமதி மறுத்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.

தூதுகோஷ்டியினரும் ராஜீவ்காந்தியும் தங்கியிருந்த ஸ்ரீ நகர் ஹோட்டலில் ''ராஜீவ் காந்தியே திரும்பிப் போ, எங்களுக்குச் சுதந்திரம் வேண்டும்'' என்ற கோஷம் முழங்கியது.

காஷ்மீரில் வெடித்திருக்கும் முஸ்லிம் சுயாட்சிக்கோரிக்கை மேலும் மேலும் வலுவடைந்து வருவது இந்தியாவுக்குப் பெரும் தலையிடியாகி விட்டது.

## பங்ளாதேஷ் கூறுகிறது

காஷ்மீருக்குச் சுதந்திரம் கோரிக் கிளர்ச்சி செய்யும் முஸ்லிம் தீவிரவாதிகளை டில்லி ஆட்சியினர் அடக்கி வருகின்றனர். இதுவரையில் இந்த ஆண்டின் ஆரம்பத்தில் இருந்து 200க்கும் அதிகமான முஸ்லிம்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

காஷ்மீர் சம்மந்தப்பட்ட தகராறை இந்தியாவும் பாக்கிஸ்தானும் பேசித்தீர்த்துக் கொள்ள வேண்டும் இவ்வாறு பங்களாதேஷ் வெளிநாட்டு அமைச்சர் குறிப்பிட்டார்.

## அமெ. குற்றச்சாட்டு

லிபியா ரசாயன ஆயுதஉற்பத்தியில் ஈடுபடுவதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது.

முழுநேர சர்வதேச ஆயுத வியாபாரியாக மாறியுள்ள அமெரிக்கா லிபியாவின் மீது உத்தியோகபூர்வமாக சுமத்தியுள்ள இந்தக் குற்றச்சாட்டை லிபியா திட்டவட்டமாக மறுத்துள்ளது.

## இரண்டு லட்சம் குர்ஆன் பிரதிகள்

உஸ்பெக்கிஸ்தான் மொழியில் அடுத்த வருடம் இரண்டு லட்சம் திருக்குர்-ஆன் பிரதிகள் வெளியிடப்படும்.

பேராசிரியர் இஸ்மத்துல்லா அப்துல்லா ஏவ் புனித குர்ஆனை அரபு மொழியில் இருந்து உஸ்பெக் மொழிக்குப் பெயர்த்து வருகின்றார். உஸ்பெக் விஞ்ஞானப் பேரவை இதற்கான உதவிகளை மேற்கொண்டு வருகின்றது.

பேராசிரியரின் இந்த முயற்சிக்கு தாஷ்கந்திலுள்ள இமாம் புகாரி மதுரசா உதவி வருகின்றது.

# நவீன தொழில்நுட்பவியலும் முஸ்லிம் நாடுகளும்

குவைத்தில் 'நவீனதொழில் நுட்பவியலும், முஸ்லிம் உலகின் அபிவிருத்தியும்' என்ற தொனிப் பொருளில் ஒரு கருத்தரங்கு நடைபெற்றது. இக் கருத்தரங்கில் முஸ்லிம் நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகளும், விற்பன்னர்களும் கலந்து கொண்டு ''விஞ்ஞான ஆராய்ச்சி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக சொற்ப தொகைப்பணமே ஒதுக்கப்படுகிறது'' என்று குறைப்பட்டுக்கொண்டனர். மூன்று தினங்கள் நடைபெற்ற இக் கருத்தரங்கை, குவைத்திலுள்ள விஞ்ஞான முன்னேற்ற அமைப்புக்கான, இஸ்லாமிய விஞ்ஞானக் கல்விச் கழகம் ஏற்பாடு செய்திருந்தது.

மேலும் இக்கருத்தரங்கில். முஸ்லிம் நாடுகள் மத்தியில் நவீன தொழில் நுட்பவியலாளர், மூலதனம், தொழில் நுட்பப் பொருட்கள் ஆகியவற்றைப் பெற்றுக் கொள்வதிலுள்ள தடைகள் அகற்றப்படவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

தொழில்நுட்பவியலைப் பொறுத்தவரையில் அரபு உலகம் பங்காளியாக இருக்காமல், பெற்றுக்கொள்பவராக இருப்பது வேதனைக்குரியதாகும். அதேவேளை முஸ்லிம் நாடுகளுக்கும் அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்குமிடையே உள்ள இடைவெளி, அகற்றப்பட்டு சுமுகமான உறவுகள் ஏற்படவேண்டும் என்றும் விருப்பம் தெரிவித்தது. கருத்தரங்கில் கலந்து கொண்டவர்கள், ''முஸ்லிம் நாடுகள் தம் மத்தியில் பிராந்திய ஒற்றுமையை வலுவூட்டுவதன் மூலம் பொதுவான சந்தைவாய்ப்பைப் பெற்றுக் கொள்ளமுடியும்'' என்று சுட்டிக்காட்டிப் பேசினார்கள்.

# இந்தோநேஷியாவில்இஸ்லாம் வேகமாக பரவுகிறது

நூற்றுக்கும் அதிகமான ஆண்களும், பெண்களும் இந்தோனேஷியாவில் குவைத்தின் அனுசரணையுடன்இயங்கிவரும் இஸ்லாமிய பாரம்பரிய புத்துயிர் வழங்கும் நிறுவனத்தில் பணியாற்றும் சன்மார்க்க அறிஞர் முன்னிலையில் புனித இஸ்லாத்தை தழுவியுள்ளதாக, சர்வதேச இஸ்லாமிய நிறுனம் செய்தி வெளியிட்டுள்ளது.

இஸ்லாத்தை தழுவியவர்கள் எந்த சமயத்தைச் சார்ந்தவர்கள் என்று அந்த செய்தி நிறுவனம் விபரம் தெரிவிக்கவில்லை.

# பிரான்ஸில் 58 மில்லியன் டொலரில் பள்ளிவாசல்!

பிரான்ஸின் இரண்டாவது பெரிய நகரமான மார்செயில்லஸில் 58 மில்லியன் டொலரில் அழகான பள்ளிவாசல் அமைக்கப்படவிருக்கிறது இதற்கான வரைபடங்கள் அல்ஜீரியாவின் பெரும் வர்த்தகரானமுஸ்தபா சுலைமானி என்பவரால் கையளிக்கப்பட்டுள்ளன. 37.5 ஏக்கர் நிலப் பரப்பில் நிர்மாணிக்கப்படவிருக்கும் இந்தப்பள்ளிவாசல் 50 மீட்டர் உயரமான மினாராக்களையும், அழகான நந்தவனத்தையும்கொண்டிருக்கும் மார்செயில்லஸ் நகரத்தின் மேயர், றொபர்ட்விகோர்வ்ஸ் இப்பள்ளிவாசல் எழிலாக அமையவேண்டும் என்றுவிருப்பம் தெரிவித்துள்ளார். 160,000 முஸ்லிம்கள் இந்த நகரத்தில் குடியிருக்கின்றார்கள். இவர்கள் அனைவரும் வட ஆபிரிக்காவைச் சேர்ந்தவர்கள்.

## மஹராக தங்கம்

இந்தியாவிலுள்ள இஸ்லாமிய பிக்ஹூ நிறுனம், பணத்துக்குப் பதிலாக மணமகளுக்கு தங்கம், வெள்ளியை மஹ்ராக வழங்குமாறு முஸ்லிம் மாப்பிள்ளை மார்களைக் கேட்டுள்ளது. இந்தியாவில் தொடர்ந்து நிலவும் நாணய பெறுமதியின் இறக்கம்காரணமாக மஹ்ராக வழங்கும் பணத்தின் பெறுமதி மாறுபடுகின்றது மட்டுமல்லாது, அப்பணத்தை மணமகளுக்கு வழங்குவதில் மணமகன் காலதாமதம் செய்வதும் ஒரு பிரதான காரணமாகும்.

புதுடில்லியில் நடைபெற்ற இஸ்லாமிய பிக்ஹூ நிறுவனத்தின் உலமாக்களால் எடுக்கப்பட்ட இந்த தீர்மானம், கட்டாயம் நடைமுறைப் படுத்தப்படவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

## இஸ்லாமிய வங்கி

இஸ்லாமிய முதலீட்டு வங்கியொன்றை பிலிப்பைன்ஸ் நாட்டில் ஆரம்பித்து நடாத்துவதற்கு அந்த நாட்டின் செனட் சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது. 45.75 மில்லியன் டொலரை ஆரம்பமூலதனமாக வைப்பிலிட்டு இவ் வங்கி செயல்படவிருக்கிறது. இவ்வங்கியின் செயல்பாடுகள் அனைத்தும் முழுமையான இஸ்லாமிய ஷரீஅத் சட்டத்தின் அடிப்படையிலேயே அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### எக்காரணம் கொண்டும் முஸ்லிம் காங்கிரஸ் பத்திரிகை விற்பனை செய்யக்கூடாது! — புலிகள் கடும் எச்சரிக்கை!

# மீறிச்செயற்பட்டால் கொலைதான் நடக்கும்!

## பயமுறுத்தல்களுக்கு பணியாத தொண்டர்களின்துணிச்சல்! பகிரங்கமாக பத்திரிகை விற்பனை! பத்திரிகைக்கு பெரும் கிராக்கி! "சுதந்திரமான கருத்து வெளிப்பாட்டுக்கு தாம் தடையில்லையாம்" — புலிப் பிரமுகர்

(நமது நிருபர்)

சாய்ந்த மருதுமுஸ்லிம் காங்கிரஸ் பதத்திரிகை விற்பனையாளர், புலிகளினால் துப்பாக்கி முனையால் கொலைப் பயமுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டார்!

''எக்காரணம் கொண்டும் முஸ்லிம்காங்கிரஸ் பத்திரிகைகளை இனிமேல் விற்பனை செய்யக்கூடாது! மீறினால், எமது துப்பாக்கிதான் பதில் சொல்லும்''

இவ்வாறு எச்சரிக்கை செய்துவிட்டு, விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த முஸ்லிம் காங்கிரஸ் பத்திரிகைகளையும் அள்ளிக்கொண்டு சென்றிருக்கின்றனர்.

பங்குனி ஏழாம் தேதி சனிக்கிழமை காலை 10 மணியளவில் ஆயுதமேந்திய சிலபுலிகள், சாய்ந்தமருது, பத்திரிகை விற்பனையாளர், ஜனாப் ஷாஹுல் ஹமீது அவர்களின் கடைக்குள்புகுந்து பத்திரிகையின் மேல் சண்ணோட்டம் செலுத்தியிருக்கிறார்கள்!

பத்திரிகை, முஸ்லிம்கள் விஷயத்தில் புலிகள் முதற் தடவையாக பின்னடைய நேர்ந்ததையும், கிழக்கு வடக்கில் நிர்ப்பந்திக்கின்ற கப்பம், வரிக்கொடுமைகளையும், கடத்திச் சென்ற முஸ்லிம் வாலிபர்களுக்கு என்ன நடந்தது என்று கேட்டும் உண்மைகளை தோலுரித்துக் காட்டியிருந்தது.

இவற்றை, கூர்மையாகஅவதானித்த புலிகள் ஆத்திரம் கொண்டு விற்பனையாளரை எச்சரிக்கை செய்துவிட்டு பத்திரிகைகளையும் கைப்பற்றிக்கொண்டு காரைதீவு முகாமுக்கு சென்றார்கள்.

பின்னர், விற்பனையாளரை தமது காரைதீவு முகாமுக்கு வரவழைத்து, ''எக்காரணம் கொண்டும் இனிமேல் முஸ்லிம் காங்கிரஸ் பத்திரிகைகளை விற்பனை செய்யக்கூடாது! மீறிச்செயல்பட்டால் கொலைதான் நடக்கும்!'' என்று எச்சரிக்கை செய்து அனுப்பினார்கள்!

இந்த பயமுறுத்தல்களுக்கெல்லாம் அஞ்சாத நூற்றுக்கணக்கான இளைஞர்களும் தொண்டர்களும் தைரியத்தோடும் துணிச்சலோடும் பிரதான வீதியில் இறங்கி முஸ்லிம் காங்கிரஸ் பத்திரிகைகளை பகிரங்கமாக விற்பனை செய்திருக்கின்றனர்.

புலிகளின் இந்த தடையினால் முஸ்லிம் காங்கிரஸ் பத்திரிகைகளுக்குபெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

பிந்திக்கிடைத்த செய்திகளின்படி, புலிகளின் மேலிடத்தின் உத்தரவில்லாமல் இந்த பொறுப்பற்ற அடாவடித்தனத்தை காரைதீவுப் பொறுப்பாளர் மேற்கொண்டதாகவும் ''ஒரு கட்சியின் சுதந்திரமான கருத்து' வெளிப்பாட்டுக்கு தடையில்லை என்று கூறியதாகவும் சம்பந்தப்பட்ட காரதீவுப் பொறுப்பாளருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க விசாரணை விடுக்கப்பட்டிருப்பதாகவும் பொறுப்பு வாய்ந்த புலிகளின் பிரமுகர் ஒருவர் தெரிவித்திருக்கின்றார்.

## 1990-முஸ்லிம் காங்கிரஸ் கிறான்பாஸ் நிர்வாகிகள்



அமர்ந்திருப்பவர்கள் (இடமிருந்து வலமாக) எஸ்.எம். எம். சம்சுதீன் (உபபெசருளாளர்) ஜி, கே. சஹாப்தீன் உப பொருளாளர்) இப்றாஹிம் (செவலாளர்) நிற்பவர்கள் இடமிருந்து வலமாக) எம். எஸ். எம். அஸ்கர் (உபசெயலாளர்) எச். ஏ. எம். ஸப்வான் (இப தலைவர்) புகைப்படத்திற்கு சமுகமளிக்காதவர்கள் ஏ. நாகூர்மீரா (பொருளாளர்) எம். எம். எம். சித்தீக் (உபதலைவர்) எம். எம். நஸீர்தீன் (கணக்குப் பரிசோதகர்)

## முஸ்லிம்காங்கிரஸ்-விடுதலைப்புலிகள் உறவு ஏற்படாதா...?

(3-ஆம் பக்கத் தொடர்ச்சி)

13. அரசியல் அமைப்பின் ஆறாவது சட்டமூலமும் திருத்தப்படும்போதுமுஸ்லிம் காங்கிரஸ் ''முஸ்லிம் மாகாணக் கோரிக்கையை முன்வைக்கும் என்று, பரவலாக பேசப்படுகிறதே உண்மையா?

ஏ. எஸ். றஸாக்
அம்பாந்தோட்டை.

13. ஆறாவது, சட்டமும் திருத்தப்பட்டாலும் சரிதான் அரசாங்கம் தனிஈழத்தையே தாரை வார்த்து கொடுத்தாலும் சரிதான் நாங்கள் ஆட்சேபிப்போம்! ஏனென்றால், நாங்கள் நாட்டின் ஒருமைப் பாட்டுக்கு சத்தியப்பிரமாணம் எடுத்தருக்கிறோம். ஆனால், ஐக்கிய இலங்கைக்குள் வடகிழக்கில் தமிழ் மக்களின் சுயாட்சிப் பிரதேசத்தை அடையாளம் காணும்போது, முஸ்லிம்களின் சுயாட்சிப் பிரதேசத்தையும் அடையாளம் சண்டே ஆகவேண்டும். எனவே, ஆறாவது சட்ட மூலம் திருத்தப்படும்போது மாத்திரமல்ல என்றும் முஸ்லிம் காங்கிரஸின் லட்சியமே முஸ்லிம் மாகாணம் தான்! அதேவேளை, அரசாங்கம் முஸ்லிம்களைகைவிடநினைத்தால்...? நிபந்தனையின் அடிப்படையில், ஆறாவது திருத்தத்தைமட்டுமல்ல ஈழத்தையே நாம் ஆதரிக்கவும் தயங்கமாட்டோம்.

14. காஷ்மீர் தீவிரவாதிகளோடு, சமரசப் பேச்சுவார்த்தைக்கே இடமில்லை' என்று பிரதமர் பிரதாப்சிங் மிகவும் கண்டிப்பாக பேசியிருக்கிறாரே..?

-ஜிஹாத்நேசன்-
வாழைச்சேனை.

14. இதில், ஆச்சரியம் எதுவுமே கிடையாது. விடுதலைப் போராட்டங்களை எடுத்த எடுப்பிலேயே அங்கீகரித்த வரலாறு, உலகத்தில் எங்காவது நடந்திருக்கிறதா? சோஷலிஸ நாடான சோவியத்து நாட்டிலேயே லித்து வேனியாவில் என்ன நடக்கிறது? எங்கும் இதான்ன்கதை. சரியோ பிழையோ, அரசியல் அதிகாரத்தை அனுபவிக்கத் தொடங்கிவிட்டால் அதுவும், சரியான அரசியல் தலைமைகொடுக்காமல், பிழையான ஆயுதம் தலைமை கொடுக்குமானால் தாமாகவே அதிகாரத்தை விட்டு இறங்கியதாக தனிநபர்களுமில்லை! சமூகங்களும் இல்லை! நாடுகளும் இல்லை!

15. இன்றைய தமிழ் சினிமாவைப்பற்றியும் உங்களிடம் கேள்வி கேட்கலாமா?

-ஏ. எம். முனவ்வர்,
கொழும்பு.14.

15. தயவுசெய்து வேண்டாம் தமிழ் சினிமா வெறும் வியாபாரமாகி விட்டது.லாபத்திற்காக அவர்கள் எதையும் செய்கிறார்கள். இந்தசமூக அமைப்புக்குள் சினிமா மாத்திரமல்ல சகல கலைகளுமே வியாபாரமாக்கப்பட்டு விட்டது.

16. முஸ்லிம் காங்கிரஸ்-விடுதலைப்புலிகளின் உறவு ஏற்படாதா? அப்படி என்ன முரண்பாடுகள்..?

எம். ஸீ. எம், உவைஸ்,
ஓட்டமாவடி.

16. ஏன் வளர முடியாது? நிச்சயமாக, உறவு வளரத்தான் போகிறது. அண்டை வீட்டுக்காரர்களோடுசண்டை பிடித்துக்கொண்டு, நிம்மதியாக வாழ முடியுமா? இரண்டு சமூகங்களும் தமதுஅடிப்படைப் பிரச்சினைகளையும் அவரவர் தனித்துவத்தையும் அங்கீகரிப்பதன் மூலம் மாத்திரம்தான் வடகிழக்கில் நிரந்தரமான அமைதியும் சமாதானமும் பிறக்க முடியும்.

## செயற்பாட்டு அங்கத்துவம்!

அன்புச் சகோதரர்களே! அஸ்ஸலாமுஅலைக்கும்.

இலங்கைவாழ் முஸ்லிம் சமூகத்தின் தனிப்பெரும் அரசியல் குரலான நமது முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் செயல்பாட்டு அங்கத்தவர்களாகப் பதிவு செய்து கொள்ள விரும்பும் சகலரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கட்சியில் குறைந்தது ஒருவருடகாலம் ஈடுபாடுள்ள சகோதரர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவராவர்.

விண்ணப்பப்படிவங்கள் தேவைப்படுவோர் தயவு செய்து தபால் மூலம் என்னுடன் தொடர்பு கொள்ளவும். அவ்வாறு தொடர்பு கொள்ளும்போது நுழைவுக்கட்டணமாக பத்து ரூபாவுக்கான காசுக்கட்டளையோ அல்லதுகாசோலையையோ ''ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்'' என்ற பெயருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

அடுத்த தொகுதி செயல்பாட்டு அங்கத்துவத் தெரிவு, வெகுவிரைவில் நடைபெறவிருப்பதால் உடனே தொடர்பு கொள்ளுங்கள். நன்றி.

**அல்ஹாஜ் எம். ரீ. ஹசன்அலி**
அங்கத்துவ பணிப்பாளர்,
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்,
375-2, டாம் வீதி,
கொழும்பு-12.

## கிளைகளைப் பதிவு செய்தல்!

அன்புடையீர், அஸ்ஸலாமு அலைக்கும்,

இந்த உலகில் வாழும் எந்த ஒரு சமூகத்திற்கும் சிறப்பாக வாழ வழிவகுக்கும் அல்குர்-ஆன், ஹதீஸ் அடிப்படையில் எமது கட்சியினால் செயற்பாட்டு அங்கத்தவர்களாகச் சேர்ந்து இயங்கும் அங்கத்தவகளுக்கான கிளைகளை அமைக்க விரும்புவோர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கட்சிக்கிளைகளை, ஒவ்வொரு மாவட்டமாக நெறிப்படுத்தும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதனால், ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ளவர்களும், பதிவு செய்யப்படாதவர்களும் தமது கிளைகள் பற்றிய தகவல்களை உடனே தந்து உதவுங்கள்.

மேலும் விபரங்களுக்கு எம்மோடு தொடர்பு கொள்ளுங்கள் இவ்வண்ணம்,

**அல்ஹாஜ் எம். ஐ. எம். இஸ்மாயில்,**
கிளைகள் பணிப்பாளர்,
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்,
375-2, டாம் வீதி, கொழும்பு 12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

مسلم کانگریس
முஸ்லிம் காங்கிரஸ்
MUSLIM CONGRESS

## எல்லார்க்கும் ஈத்முபாறக்!

**அல்லாஹ் - ரசூல் (ஸல்) அடிப்படையில்
அரசியல் அதிகாரம் இல்லாத சமூகம்
அனாதைச் சமூகம்! அதனால்,
எங்கள் அரசியல் தனித்துவம்—பாரம்பரிய
பிரதேசம்—அதில் சுயநிர்ணய உரிமை —
எங்கள் கோரிக்கை—இலட்சியம்!
இது நெருக்கடியான காலம்! பொறுமை—
நம்பிக்கை—துணிவு—தியாகம் தேவை!
அனைவரும் அதற்காக பிரார்த்திப்போமாக!**

இது உங்கள் அன்பின் **ஆசிரியர்.**

### விடுதலைப்புலி-முஸ்---

-2ஆம் பக்கத் தொடர்ச்சி

முஸ்லிம் காங்கிரஸுக்குப் பின்னால் மக்கள் சக்தி திரண்டு நிற்கிறது!

அதேவேளைபடுமோசமான சந்தர்ப்பவாத மக்களால்நிராகரிக்கப்பட்ட ஊழல் மன்னர்களான மண்குதிரைகளுக்குப் பின்னால் யார் இருக்கிறார்கள்? இவர்களை, புலிகள் புரிந்து வைத்திருப்பதை அறிந்து மகிழ்ச்சியடைகின்றோம்.

விடுதலைப் புலிகள் மக்கள் ஜனநாயக முன்னணி ஜனநாயக நீரோட்டத்தில்இணைந்து கொள்கின்ற தமிழ் மக்களின் அரசியற் சக்தி என்ற அடிப்படையிலும், முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம்களின் அங்கீகரிக்கப்பட்ட ஓர் அரசியல் சக்தி என்ற அடிப்படையிலும் இரு சமூகங்களினதும் தனித்துவமும் அடிப்படைப் பிரச்சினைகளும் அபிலாஷைகளும் எதிர்நோக்கப்பட வேண்டும்.

வடகிழக்கில் நிரந்தர அமைதிக்கும், தமிழ் முஸ்லிம் உறவுகள் மலர்வதற்கும், தமிழ், முஸ்லிம் விடுதலையை அறுவடைசெய்வதற்கும், தமிழர் முஸ்லிம்கள், விடுதலைப் புலிகள்-முஸ்லிம் காங்கிரஸ், பரஸ்பரம் தமது தனித்துவத்தை அங்கீகரிக்க வேண்டும்!

இதற்கான நல்ல அறிகுறிகள், இரண்டு பக்கமுமிருந்து தென்பட ஆரம்பித்துள்ளன. அதைக்குறித்து, தமிழ்- முஸ்லிம் நல்லுறவுக்கும் அதன்விடுதலைக்கும் ஆதர்சமாக இருக்கின்ற அனைத்து சக்திகளும் சற்று ஆறுதல் அடையலாம்,

### தொழுகைக்கு...

1ஆம் பக்கத் தொடர்ச்சி

அவன்-அர்ரஹ்மான்! எல்லார்க்கும்ஒன்றுபோல்கிருபை செய்பவன்! அவன், சிலரின் தலைகளில் மட்டும் ஏழ்மையை எழுதியிருக்கவே மாட்டான், அவர்கள்தான் அவர்களின் தலையில்எழுதிக் கொண்டார்கள். அல்லது, அவர்களின் தலைகளில் எழுதுவதற்கு ஆரையோ அனுமதித்திருக்கிறார்கள், அவர்கள் தமது தலைவிதியை தாமாகவே மாற்றாத வரையில் அல்லாஹ்வும்மாற்றமாட்டான்.

எனவே, இந்த வருடபுனித ரமழான் பெருநாளில் புதியதோர் சபதம் செய்வோம்!

முதலில் "எடுக்கின்ற கையாக இருக்காமல் கொடுக்கின்ற கையாக இருப்போமாக!"

இதன் அடுத்தபடியில், 'எடுக்கவும் இல்லாமல், கொடுக்கவும் இல்லாமல்எல்லார்க்கும் எல்லாம் கிடைக்கின்ற ஓர் இஸ்லாமிய பொருளாதார சமூக அமைப்பை இலங்கிடச் செய்வோமாக!"

### உலகளாவிய முஸ்--.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

புத்திரைகள் இப்போதுதான் சற்று விலகத் தொடங்கியுள்ளன. இலங்கை முஸ்லிம்களின் எதிர்காலம் மாத்திரமின்றி உலகளாவிய முஸ்லிம்களின் எதிர்காலமும் இந்த உலகளாவிய முஸ்லிம் வெகுஜன-ஜனரஞ்சகத்தலைமைத்துவத்தின் மூலம் நிச்சயம் ஒளிமயமாகலாம்! இன்ஷா அல்லாஹ்!

இலங்கை முஸ்லிம்களின் இன்றைய பகைப்புலனில் குறிப்பாக வடக்கு - கிழக்கில் வாழும் முஸ்லிம்கள் அடிமைகளாக்கப்பட்ட இன்றைய, நிலையில் ஜனநாயக உரிமைகள் பறிக்கப்பட்டு, முஸ்லிம் சமூகம்-ஒரு சுதந்திர நாட்டின் அடிமைகளாக ஆக்கப்பட்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில், இத்தகைய ஒருசர்வதேசகௌரவம் முஸ்லிம்களுக்குக் கிடைத்திருப்பது அல்லாஹ்வின் அருட்கொடையேயன்றி,வேறுஎதுவுமேயில்லை.

இந்த அருட்கொடையை நினைந்துமகிழும்அதேவேளையில், எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்கும் நன்றி சொல்லி நாடளாவிய ரீதியில் கருத்தரங்குகளும், வரவேற்பு வைபவங்களும் ஏற்பாடு செய்து தம் தலைவருக்கு வாழ்த்தும் வரவேற்பும் தெரிவிக்கின்ற ஆயிரமாயிரம் அன்பு நெஞ்சங்களுக்கும், நேரிலும், அஞ்சல் தொலைபேசி தந்திகள் மூலமாகவும் வாழ்த்துத் தெரிவிக்கும் இனிய இதயங்களுக்கும் இந்த ஈதுல் பித்ர்-ஈகைத்திருநாளில் எங்கள் மனமார்ந்த பெருநாள் வாழ்த்துக்களையும், நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதே வேளையில் இலங்கை முஸ்லிம்களின் இன்றைய

### எங்கள் அரசியற்---

1-ஆம் பக்கத் தொடர்ச்சி

துவத்துக்கு அங்கீகாரத்தை உறுதிப்படுத்தி, அவர்களது சுய-நிர்ணய உரிமைகளுக்கு வெற்றியை தந்தருள்வானாக.

முஸ்லிம்களை ஒரே கொடியின் கீழ் ஒற்றுமைப்படுத்த பெரும் முயற்சி செய்யும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின்கருமங்களைஇலகுபடுத்தி வழியை ஒளிபடுத்துவானாக.

இந்தப் புனிதமான பெருநாளில் முஸ்லிம் காங்கிரஸ் அங்கத்தவர்கள், ஆதரவாளர்கள்,அனுதாபிகள்அனைவருக்கும் எனது மானஸீகமான பெருநாள் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

அத்தோடு இலங்கை முஸ்லிம்கள் அனைவருக்கும் ஈதுல் பித்ர் வாழ்த்துக்களை முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது நாடு சிறக்க, நமது ஒற்றுமையை உறுதிப்படுத்த வருமாறு உங்களை இனிய நினைவுகளுடன் இதய சுத்தியாய்இணையும்படி அன்புடன் அழைக்கிறேன்.

வெகுஜன-ஜனரஞ்சக தலைமைத்துவத்தின் அரசியல் தீர்க்கதரிசனத்துக்கும் அதன், ஆளுமைக்கும், தியாகங்களுக்கும்கிடைத்த இந்த மாபெரும் வெற்றிகளுக்கும், கௌரவத்திற்கும் ஆணிவேராக விளங்குகின்ற-அன்புச் சகோதரர். அஷ்ரஃப்அவர்களின் ஆரோக்கியத்துக்கும், நீடித்த ஆயுளுக்கும் எல்லாம் வல்ல அல்லாஹ்வைப் பிரார்த்திப்போமாக!

இலங்கை முஸ்லிம்களுக்கும் ஆசிய நாடுகளின் முஸ்லிம்களுக்கும் மட்டுமல்ல; இந்த உலகத்தின் மனிதகுலம் முழுவதற்குமே தம்மை அர்ப்பணிப்பதற்கு, அவருடைய இரக்கமும், ஈகையும் நிறைந்த ஈரநெஞ்சத்தை மேலும், மேலும் விசாலமாக்குமாறும், உயர்ந்து செல்லும் வேளைகளில் எல்லாம் மனிதபலஹீனங்களில் நின்றும் தம்மை புடம் போட்டுக் கொள்வதற்கு அவருக்கு, அல்லாஹ் அளவற்ற அருளைச் சொரியுமாறும்,அவரின்மீது பாசமும் பக்தியும், விசுவாசமும் கொண்ட ஆயிரமாயிரம்தியாகிகள் இந்த ஈகைத்திருநாளில் பிரார்த்திக்கின்றோம்! ஆமீன்!

## இஸ்லாமிய வாழ்வு ஒவ்வொரு கணத்திலும்!

பொதுச் செயலாளர் சகோ. எம்.ஜே.ஏ.ஸஹீத்



ஆண்டுதோறும், ரமழான் முழுவதும் பகலெல்லாம் பசித்திருந்து - பசியின் கொடுமை உணர்ந்தோம். அதனால்தான தர்மங்கள் செய்தோம், வாரி வழங்கினோம். அல்லாஹ்வின் கட்டளைப்படி 'ஸக்காத்' என்னும் ஏழை வரியையும் அள்ளிக் கொடுத்தோம்.

இரவெல்லாம் விழித்திருந்து நின்று வணங்கினோம். செய்த பிழைக்காக அல்லாஹ்விடம் அழுது மன்றாடினோம். அறிந்து செய்த பாவம்,அறியாமற் செய்த பாவம் அனைத்திற்கும் நெஞ்சுருகி அதற்காக தௌபா செய்து பிழை பொறுக்கத் தேடினோம்.

## தன்மானம் இழக்காத சமாதானத்துக்காக--!

பொருளாளர் சகோ. வபாபாறூக்



அஸ்ஸலாமு அலைக்கும்! ஈதுல் பித்ர் இனியவாழ்த்துக்கள்!

இந்த நாட்டு மக்கள் நிம்மதியிழந்து எத்தனை ஆண்டுகளாகின்றன? வடகிழக்கு முஸ்லிம்கள் நிம்மதியாகபெருமூச்சு விடவே முடியாதா?

சிங்களதமிழ்-முஸ்லிம் சமூகங்களுக்கிடையில் பரஸ்பரம் தமது தனித்துவத்தை அங்கீகரிப்பதன்மூலம்மாத்திரம்தான் உண்மையான சமாதானம் நிலவ முடியும்! அந்தச் சமாதானம் ஒரு சமூகத்தின் தன்மானத்தை இழந்து ஏற்பட முடியாது! அவ்வாறு தன்மானத்தை விலைபேசி ஒரு சமாதானம் ஏற்படுமானால் அது நீறுபூத்த நெருப்பாக ஒரு நாள் வெடித்துவிடவும்கூடும்.

எனவே, முஸ்லிம்கள் தமது தன்மானத்தை இழக்காத ஒரு சமாதானத்துக்காகப் பிரார்த்திப்போமாக!

## முன்மாதிரியான சமூகமாக வாழ்வோம்!

அல்ஹாஜ் சகோ. எஸ். எஸ். எம். அபூபக்கர் எம்.பி.



புனித ரமளான் நோன்பை இறை கட்டளைப்படிநோற்று ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாளைக் கொண்டாடும் என் இதய பாசத்துக்குரிய சகோதர முஸ்லிம்கள் அனைவருக்கும் என் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சிஅடைகின்றேன்

புனித நோன்பு உள்ளத்தில் தூய்மையையும், புத்துணர்வையும், சகிப்புத்தன்மையையும்தோற்றுவிக்கிறது. இந்தப் பயிற்சி நெறி வருடாந்தம் இறையருளாக எமக்குக் கிடைக்கின்றது; இந்தப்பாக்கியத்தைஇவ்வருடமும்பெற்ற நாம், அதனடிப்படையிலேயே எம் வாழ்வையும் அமைத்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

அல்லாஹ் நமது தூய முயற்சிகளுக்கு ரமளானின் பரிசாக அருளை அள்ளி வழங்குவானாக,ஆமீன்! ஈத் முபாறக்.

## கண்கெட்ட பிறகா?

ஹிஸ்புல்லாஹ் எம்,பி,

அஸ்ஸலாமு அலைக்கும். அன்புள்ள சகோதரர்களே! அனைவருக்கும் ஈத் முபாறக்!

இந்த வருடமும் வடகிழக்கில் வாழும் முஸ்லிம்கள் நிம்மதியாக பெருநாளை கொண்டாடமுடியவில்லை!

எத்தனையோ முஸ்லிம் இளைஞர்கள் என்ன ஆனார்கள் என்று இதுவரை தெரியாது! எத்தனையோ வீடுகளில் மரண ஓலம் இன்னும் ஓயவில்லை.

ஜனநாயகம்-சமத்துவம் மனிதாபிமானம் என்பதெல்லாம் வெறும் வாய்ச் சொற்களாகி விட்டன. துப்பாக்கிக் கலாச்சாரம் மட்டுமே கொடிக்கட்டிப் பறக்கின்றது!

முஸ்லிம்களைப் பொறுத்த மட்டில் அரசுநம்மீது காட்டும் கரிசனை 'கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம்' என்று ஆகிவிடப்போகிறது.



## அரசு-புலி-முஸ்.காங்-பேச்சுவார்த்தை

அல்ஹாஜ்புஹார்தீன் எம்.பி



புனித றமழான் முழுவதும் நோன்பிருந்தோம்! இரவெல்லாம் நின்று வணங்கினோம்! செய்த பாவங்களுக்கெல்லாம் 'தௌபா' செய்தோம்! எங்களால் முடிந்த மட்டும் அல்லாஹ் தந்த நிஃமத்திலிருந்து வாரிவழங்கினோம். இன்று நோன்பு பெருநாளை கொண்டாடுகிறோம். இன்றைய தினத்தில் உண்மையில் மனம் திறந்து, ஈதுல் பித்ர் பெருநாள் வாழ்த்துக்களைகூறமுடியவில்லை!

நான், முதலில் ஒரு முஸ்லிம்! இரண்டாவது நானொரு இலங்கையன்! நாடு நிம்மதியில்லாமல் இருக்கும்போது, நாம் மட்டும் வாழ்த்துக்கூறி, எவ்வாறு மகிழ்ச்சி கொண்டாட முடியும்?

வடகிழக்கில் முஸ்லிம்கள் நிம்மதியை இழந்திருக்கிறார்கள் அவர்கள் அடிமைப்படுத்தப்படுகிறார்கள்.

இதற்குதீர்வுகாண்பதற்காக அரசு - புலிகள் - முஸ்லிம் காங்கிரஸ் என்ற மூன்று அரசியற் சக்திகளும் ஒன்றிணைந்து முத்தரப்பு பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

**ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் உத்தியோக பூர்வ இதழ்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு-12 இல. 375,2, டாம் வீதியிலுள்ள ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் அதன் அச்சுச்சாதனங்களுடன் அச்சிட்டு வெளியிடப்பட்டது.